அகத்தியர் துணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

# ஞானத்திருவடி

ஓங்காரக்குடில் ஆசான் அருளிய சன்மார்க்க உண்மைப் பத்திரிகை
சார்வரி ✪ ஐப்பசி (அக்டோபர் – 2020) விலை: ரூ.10/–

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## உள்ளடக்கம்

1. சித்தர்கள் போற்றித் தொகுப்பின் சிறப்பு ........ 5

2. சித்தர்கள் போற்றித் தொகுப்பு ........ 6

3. மகான் பதஞ்சலியார் அருளிய ஆசி நூல் ........ 11

4. 23.02.1988 அன்று அருளிய **குருநாதரின் அருளுரை**
**முருகன் அருள் இல்லையேல் உலகம் இல்லை** ........ 16

5. புரட்டாசி மாத பௌர்ணமி விழா ........ 42

6. ஐப்பசி மாத பௌர்ணமி விழா ........ 42

7. ஓங்காரக்குடில் வெளியீடுகள் ........ 45

8. ஓங்காரக்குடில் நித்திய செயல்பாடுகள் ........ 54

சிறிதும் கருணையில்லாது உயிர்க்கொலை செய்து
உண்ணுகின்ற மக்கள் நட்பு நமக்கு தேவையில்லை!
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை,
ஓங்காரக்குடில், துறையூர்.

வருகின்ற அரங்கன் தருமம்
வற்றினால் வையகம் அழியுமென
தருகின்ற சக்தியை அரங்கனுக்கு
தவமாக தக்க துணையாக நின்று பெருக்கிவர

பெருகிட அரங்கன் தருமத்தால்
பெருமைமிக்க உயர்கொள்கையால்
ஆறுதலும் நல்ல மாறுதலும் கண்டு
அழிவில்லா பாதுகாப்பை பெறும்

காப்புதரும் ஞானியரின் வழி
கந்தவேலன் சுடர்காட்டி நடத்திட
ஒப்புக் கொள்ளும் தேசம் சமூகம்
ஓங்கார சக்திபலம் கண்டு பிழைக்கும்

– மகான் பதஞ்சலியார் ஆசிநூல்

அன்பார்ந்த வாசகர்களுக்கு வணக்கம்,

**ஞானத்திருவடி நூலே ஞானிகள் திருவடியாகும்.**

ஞானத்திருவடி என்னும் நூல் முற்றுப்பெற்ற மகான்களைப் பற்றி பேசுவதாகும். இந்நூலை வாங்குதல், படித்தல், மற்றவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல் ஆகிய அனைத்துமே ஜென்மத்தைக் கடைத்தேற்ற உதவும். எனவே இந்நூல் ஞானவாழ்வு விரும்புகிறவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். இந்நூல் வீட்டில் இருந்தால் நவகோடி சித்தர்களும், சித்தர்களுக்கெல்லாம் தலைவராகிய அகத்தீசரும், அவருக்கு ஆசானாகிய சுப்பிரமணியரும் நமது வீட்டில் இருந்து அருள் செய்வதாக எண்ணவேண்டும்.

மேலும் ஓங்காரக்குடில் ஆசான் 44 ஆண்டு காலம் ஓங்காரக்குடிலில் கடுந்தவம் இருந்து வருகிறார்கள். உலக மக்களை கடவுளின் பிள்ளைகளாக பார்த்து, அவர்களுக்கு வரும் துன்பங்களிலிருந்தும், துயரங்களிலிருந்தும் விடுவித்து ஞானியர்களின் திருவடிதான் உண்மை ஆன்மீகம் என்று சொல்லி அவ்வழியில் நம்மை அழைத்துச் செல்லும் ஓங்காரக்குடில் ஆசான் முருகப்பெருமானின் கல்கி அவதாரம் **தவத்திரு ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள், ஞானிகளின் பாடல்களில், தான் உணர்ந்த பல இரகசியங்களை நம்பால் கருணைகொண்டு எளிய முறையில் அருளிய அருளுரைகள் அடங்கியதுதான் **ஞானத்திருவடி** நூல்.

விரைவில் எதிர்பாருங்கள் அற்புதமான “**ஞானயுகம்**” அமைகின்றதை!

அன்புடன்
இரா.மாதவன்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**பாவபரிகாரமும் சாபவிமோசனமும் பெற்றுத்தரவல்ல அற்புத பாராயண நூல்**

## சித்தர்கள் போற்றித் தொகுப்பு

ஞானிகள் அத்துணைபேரும் முருகப்பெருமானால் வாசி நடத்திக் கொடுக்கப்பட்டு மும்மலக் குற்றத்தை வேருடன் அறுத்து வெற்றி கண்டவர்கள். அவர்களுக்கு இறப்பும் பிறப்பும் இல்லை. நரை, திரை, மூப்பு இல்லை. சித்தர்கள் அனைவரும் மரணமில்லாப் பெருவாழ்வை பெற்றவர்கள். ஆக்கல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழில் செய்யும் வல்லமையை பெற்றவர்கள். இவர்களின் திருவடிகளை பூஜித்தாலே நாம் செய்த பாவங்களெல்லாம் நீங்கிவிடும். பாவங்களுக்கு காரணமான உயிர்க்கொலை செய்தல், புலால் உண்ணுதல், மது அருந்துதல், சூதாடுதல், வரவுக்கு மீறிய செலவு செய்தல் இன்னும்பல தீவினை செயல்களெல்லாம் கீழ்க்கண்ட சித்தர்கள் போற்றித் தொகுப்பை படித்தால் நீங்கிவிடும். பெருமைக்குரிய சித்தர்கள் போற்றித் தொகுப்பை ஒரு தீபம் ஏற்றி வைத்து பயபக்தியுடன் பணிந்து வணங்கி பாராயணம் செய்தால் இல்லறமும் சிறக்கும், வீடுபேறாகிய ஞானமும் கைகூடும்.

கல்வி கற்கும் மாணவர்கள் தினசரி பாராயணம் செய்தால், கல்வியில் சிறந்த தேர்ச்சியை பெறுவதோடு நல்ல வேலை வாய்ப்பும் அமையப் பெறுவார்கள்.

ஜென்மத்தைக் கடைத்தேற்ற விரும்புகின்ற ஆன்மீகவாதிகளுக்கு இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பானது, ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கிடைத்த ஒரு அற்புதமான பாராயண நூலாகும்.

எதை விரும்பி சித்தர்கள் போற்றித் தொகுப்பை பாராயணம் செய்கிறீர்களோ அதை அப்படியே பெற்றுத் தரவல்ல அற்புதமான பாராயண நூல் சித்தர்கள் போற்றித் தொகுப்பாகும். சித்தர்கள் சாதி, மதம், இனம், மொழி, தேசம் கடந்து மனிதகுலத்திற்கு பொதுவானவர்கள். ஆதலினால் சித்தர்கள் போற்றித் தொகுப்பை எல்லா சமயத்தினரும், எல்லா நாட்டினரும், பேதாபேதமின்றி பாராயணம் செய்யலாம். ஆண், பெண், சிறார், பெரியோர், குடும்பஸ்தன், துறவி, பஞ்சபராரிகள், ஏழை எளியோர் என யாவரும் பாராயணம் செய்யலாம். கணவனை இழந்தவர்களும் தடையின்றி விளக்கேற்றி பாராயணம் செய்யலாம். எந்த கட்டுப்பாடும் இல்லை, எந்த சடங்குகளும் இல்லை.

அற்புதம் வாய்ந்த இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை பல கோடி பேர் பாராயணம் செய்து எண்ணற்ற பலன்களை அடைந்ததோடு அவர்களது பிரச்சனைகள் தீர்ந்திடவும், வேண்டுகோள்கள் நிறைவேறி மனம் மகிழ்ந்ததும், இவ்வுலகம் கண்ட அற்புத உண்மையாகும். இந்த சித்தர்கள் போற்றித் தொகுப்பை இன்னும் பலகோடி மக்கள் பாராயணம் செய்து மேன்மை அடைவார்கள் என்பது ஞானிகள் வாக்காகும்.

இதுவரையிலும் ஞானவாழ்வு அடைவதற்கு துணையாக இருந்ததும், இனி அடையப்போகின்றவர்களுக்கும் சித்தர்கள் போற்றித் தொகுப்பு துணையாகும் என்பது சத்திய வாக்காகும்.

## துவக்கப்பாடல்

திருவடி ஞானம் சிவமாக்கு விக்கும்
திருவடி ஞானம் சிவலோகம் சேர்க்கும்
திருவடி ஞானம் சிறைமலம் மீட்கும்
திருவடி ஞானமே திண்சித்தி முத்தியே.

திருமந்திரம் : திருவடிப்பேறு : **1598**

ஞானியர்களின் திருவடி பூஜைதான் உண்மை ஆன்மீகம் என்று
உலகறியச் செய்யும் வள்ளல்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்

**தொகுத்து வழங்கிய**

# சித்தர்கள் போற்றித் தொகுப்பு

| | | | |
|---|---|---|---|
| ஓம் | அகத்தியர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அகப்பைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அசுவினித்தேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அத்திரி மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அநுமான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அம்பிகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருணகிரிநாதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அருள்நந்திசிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அல்லமாபிரபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | அழுகண்ணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | 10 |
| ஓம் | இடைக்காடர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமலிங்கசுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | இராமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | உமாபதி சிவாச்சாரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஔவையார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கஞ்சமலைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடைப்பிள்ளைச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கடுவெளிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | கண்ணானந்தர் | திருவடிகள் போற்றி | 20 |

ஓம் கண்ணிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கணநாதர் திருவடிகள் போற்றி
ஓம் கணபதிதாசர் திருவடிகள் போற்றி
ஓம் கதம்பமகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் கபிலர் திருவடிகள் போற்றி
ஓம் கமலமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கருவூர்தேவர் திருவடிகள் போற்றி
ஓம் கல்லுளிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் கலைக்கோட்டு முனிவர் திருவடிகள் போற்றி
ஓம் கவுபாலச்சித்தர் திருவடிகள் போற்றி 30
ஓம் கணராமர் திருவடிகள் போற்றி
ஓம் காகபுஜண்டர் திருவடிகள் போற்றி
ஓம் காசிபர் திருவடிகள் போற்றி
ஓம் காலாங்கிநாதர் திருவடிகள் போற்றி
ஓம் குகைநமச்சிவாயர் திருவடிகள் போற்றி
ஓம் குதம்பைச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் குமரகுருபரர் திருவடிகள் போற்றி
ஓம் குருதட்சணாமூர்த்தி திருவடிகள் போற்றி
ஓம் குருராஜர் திருவடிகள் போற்றி
ஓம் குறும்பைச்சித்தர் திருவடிகள் போற்றி 40
ஓம் கூர்மானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் கொங்கணேஸ்வரர் திருவடிகள் போற்றி
ஓம் கோரக்கர் திருவடிகள் போற்றி
ஓம் கௌசிகர் திருவடிகள் போற்றி
ஓம் கௌதமர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கமுனிச் சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சங்கர மகரிஷி திருவடிகள் போற்றி
ஓம் சங்கிலிச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் சச்சிதானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சட்டநாதர் திருவடிகள் போற்றி 50
ஓம் சண்டிகேசர் திருவடிகள் போற்றி
ஓம் சத்யானந்தர் திருவடிகள் போற்றி
ஓம் சிவயோகமாமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் சிவவாக்கியர் திருவடிகள் போற்றி
ஓம் சிவானந்தர் திருவடிகள் போற்றி

| | | | |
|---|---|---|---|
| ஓம் | சுகப்பிரம்மர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சுந்தரமூர்த்தி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூதமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சூரியானந்தர் | திருவடிகள் போற்றி | 60 |
| ஓம் | சூலமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சேதுமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | சொரூபானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜம்பு மகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜமதக்னி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனகர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனந்தனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனாதனர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜனக்குமாரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஜெகநாதர் | திருவடிகள் போற்றி | 70 |
| ஓம் | ஜெயமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ஞானச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | டமாரானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தன்வந்திரி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தாயுமான சுவாமிகள் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திரிகோணச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருஞானசம்பந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருநாவுக்கரசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருமாளிகைத் தேவர் | திருவடிகள் போற்றி | 80 |
| ஓம் | திருமூலதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | திருவள்ளுவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தூர்வாசமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | தேரையர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தனார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நந்தீஸ்வரர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாதாந்தச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நாரதர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | நொண்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பட்டினத்தார் | திருவடிகள் போற்றி | 90 |

| | | | |
|---|---|---|---|
| ஓம் | பத்ரகிரியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பதஞ்சலியார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரத்துவாசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பரமானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பராசரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பாம்பாட்டிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிங்களமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிடிநாகீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிருகுமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பிரும்மமுனிவர் | திருவடிகள் போற்றி | 100 |
| ஓம் | பீர்முகமது | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புண்ணாக்கீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலத்தீசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | புலிப்பாணிச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | பூனைக்கண்ணார் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | போகமகாரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மச்சமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மஸ்தான் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மயூரேசர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாணிக்கவாசகர் | திருவடிகள் போற்றி | 110 |
| ஓம் | மார்க்கண்டேயர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மாலாங்கன் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மிருகண்டரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | முத்தானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மெய்கண்டதேவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | மௌனச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யாகோபு | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யூகிமுனிவர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகச்சித்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | யோகானந்தர் | திருவடிகள் போற்றி | |
| ஓம் | ரோமரிஷி | திருவடிகள் போற்றி | 121 |
| ஓம் | வசிஷ்டமகரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரதரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வரரிஷி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வராகிமிகி | திருவடிகள் போற்றி | |
| ஓம் | வால்மீகி | திருவடிகள் போற்றி | |

ஓம் விசுவாமித்திரர் திருவடிகள் போற்றி
ஓம் வியாக்ரமர் திருவடிகள் போற்றி
ஓம் வியாசமுனிவர் திருவடிகள் போற்றி
ஓம் விளையாட்டுச்சித்தர் திருவடிகள் போற்றி
ஓம் வேதாந்தச்சித்தர் திருவடிகள் போற்றி 131
ஓம் எண்ணிலா கோடி சித்தரிஷி கணங்கள்
திருவடிகள் போற்றி போற்றி.

## நிறைவுப்பாடல்

வாழ்கவே வாழ்களன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே.

திருமந்திரம் 3047

மேற்கண்ட 131 சித்தர்கள், மகான்களின் திருவடிகளை தினசரி காலையும் மாலையும் போற்றி பூஜை செய்வதே சிறப்பறிவாகும். சிறப்பறிவு பெற்றவர்களுக்கு குடும்ப ஒற்றுமை, புத்திர பாக்கியம், உடல் ஆரோக்கியம் போன்ற நல்வினைகள் பெருகி, மது அருந்துதல், புலால் உண்ணுதல், சூதாடுதல் போன்ற தீவினைகள் நீங்கிவிடும். மேலும், மாதம் ஒருவருக்கோ அல்லது இருவருக்கோ பசித்த ஏழைகளுக்கு பசியாற்றியும் வந்தால், பாவம் புண்ணியம் பற்றி உணர்ந்து புண்ணியம் பெருகி ஞானியாவார்கள் என்பது சத்தியம்.

## ஓங்காரக்குடில் ஆசான் ஆசி!



ஓங்காரக்குடிலில் நடைபெறும் அன்னதானம் மற்றும் அறப்பணிகளுக்காக, தமிழகமெங்கும் ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கம் சார்பாக ஞானத்திருவடி நூலை பொதுமக்களுக்கு கொண்டு சேர்க்கும் அன்பர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் எல்லாம் வல்ல ஞானிகள் அருள் கிட்டி எல்லா நன்மைகளும் அடைவார்கள். மேலும் உடல் ஆரோக்கியமும், நீடிய ஆயுளும், எல்லா நலமும் வளமும் பெறுவார்கள். மேலும் ஞானமும் சித்திக்கும் என்று ஓங்காரக்குடில் ஆசான் ஆசி வழங்கியுள்ளார்கள்.



அன்பான வாசகர்களே வணக்கம்

**உங்கள் ஆண்டு சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா!**

ஞானத்திருவடி நூலை படித்து, உங்கள் உணர்வுகளை எங்களோடு பகிர்ந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

– அன்பன் இரா.மாதவன், 98424 55661.

## உலக நன்மைக்காக அவதரித்தவர் முருகப்பெருமான்
## சார்வரி வருடம் ஐப்பசி மாத ஞானத்திருவடி நூலிற்கு
# மகான் பதஞ்சலிமுனிவர் அருளிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன் M.A., B.Ed.,
திருச்சி. செல் : 99655 71837

1. ஏழ்மையை விரட்டும் மாதவசியே
எளியவர்க்கும் அருளும் மகா ஞானியே
ஆளுமை சக்திகளை மீட்டு
ஆறுமுகனார் ஞானஆட்சி நிறுவ

2. நிறுவிட ஞானத்தலைவன் முருகன்
ஞானமாக அவதாரமுமாக வந்த
ஆறுமுக அரங்கமகா தேசிகனே
அகிலமதில் உன்சக்தியாக வரும்

3. வருகின்ற ஞானத்திருவடி நூலுக்கு
வழங்குவேன் சார்வரி துலை திங்களுக்கான
பெருமைபட ஆசிதனை பதஞ்சலி யானும்
புகலுவேன் வரங்களாக இனிதே

4. இனிதே அருளை வழங்கி
எல்லா மக்களையும் இணைக்கும்
துணிவுமிக்க சேவை ஆற்றுகின்ற
தேசிகன் உயர்சேவை கண்டுமே

5. கண்டுமே உலக ஞானியர் படைகள்
கந்தனுடன் வேழமுகன் மும்மூர்த்திகள்
தொண்டு கண்டு முப்பெருந் தேவியர்கள்
தேவர்கள் ரிஷிகள் பத்தினிகள் எல்லாம்

6. எல்லாம் வியப்பில் மூழ்கியிருக்க
இடரிலும் எதிர்மறைகள் நிறைந்த
வல்லமையான கலித்துன்பத்திலும்
வற்றா தருமசேவை ஆற்றுகின்ற

7. ஆற்றுகின்ற அரங்க ஞானியை
ஆற்றல்மிக்க அரங்கன் சீடர்களை
மாற்றம் தரும் அரங்கன் கொள்கைகளை
மக்களிடம் கொண்டு செல்லும் சேவைகளை

8. சேவைகளை கண்டு வியந்து
சேர்ந்துமே பிரணவக் குடிலின்
தேவைகளை இவர்களெல்லாம்
திடமளித்து பூர்த்தி செய்து காத்து வருக

9. வருகின்ற அரங்கன் தருமம்
வற்றினால் வையகம் அழியுமென
தருகின்ற சக்தியை அரங்கனுக்கு
தவமாக தக்க துணையாக நின்று பெருக்கிவர

10. பெருகிட அரங்கன் தருமத்தால்
பெருமைமிக்க உயர்கொள்கையால்
ஆறுதலும் நல்ல மாறுதலும் கண்டு
அழிவில்லா பாதுகாப்பை பெறும்

11. காப்புதரும் ஞானியரின் வழி
கந்தவேலன் சுடர்காட்டி நடத்திட
ஒப்புக் கொள்ளும் தேசம் சமூகம்
ஓங்கார சக்திபலம் கண்டு பிழைக்கும்

12. பிழைக்கும் பேதங்களை அகற்றி
பேருலகே கந்தன் காட்டும் சன்மார்க்கம்
தழைக்க வழிவகை செய்து
தவராசனை தொடரும் காலம்

13. காலம் கனிந்து வருகவே
கலிமாயையில் அகப்படாதபடி
ஞாலம் கருதி திருவடி பற்றிட
நல்கிய பேரிடரின் அழிவு விலகி

14. விலகியே எங்கும் உயிர் பாதுகாப்பு
வேலவன் சக்தியாக அடைந்து
உலகம் சமநிலை காணும்
உயிர்க்கொலை நீக்கும் உபாயம் கண்டால்தான்

15. கண்டால்தான் உயிரை மாய்க்கும்
கலித்துன்பமான நச்சுக்கிருமி வழி
கண்டம் அல்லல் விலகும்
கருணைபட மரண பயம் விலகி

16. விலகியே யாவர்க்கும் மீட்பு
வேலவனால் சடுதி காணும்
உலகை மாற்றும் சக்தியாக
உயர்ஞானி தரும் கொள்கைகள்

17. கொள்கைகள் தாங்கி வருகின்ற
குருவருளாம் ஞானத்திருவடி நூல்
வாழ்வில் பெற்று வாசிப்பவர்கள்
வைத்துமே வணங்கி பூஜிப்பவர்கள் என

18. என அனைத்து பேர்களும்
இடரை பேரிடரை வெல்லும்
ஞானமும் சக்தியும் பெறுவர்
ஞானியர் உடனிருக்கும் சக்தி பெற்று

19. சக்தி பெற்று சாகா வரம் பெறுவர்
சரவணச் சுடரேற்றி வணங்கிட
சக்திமிக்க ஞானியர் தேடிடும்
சன்மார்க்க வழிவழி ஞானிகளாவர்

20. ஆவரே அரங்கமகான் அவதரித்த
அற்புத ஞானஆட்சி காலமதில்
அவரவரும் பங்களிப்பு கொண்டோராகி
அழியாமையுடன் பிறவா பேறடைவர்

21. அடையவே கலித்துன்பம் ஓடும்
அரங்கமகானை அணுக அணுகவே
தடையின்றி ஞானயுகம் தானும்
தவராசன் தவபூர்த்தி போல் அரங்கேறிடும்

ஞானத்திருவடி நூலுக்கு பதஞ்சலி என் ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

சார்வரி ஆண்டு ஐப்பசி மாதத்திற்கான ஞானத்திருவடி நூலிற்கு மகான் பதஞ்சலிமுனிவர் அருளிய ஆசி நூலின் சாரம் :

உலகினில் உள்ள வறுமையை விரட்டி மக்களை காக்கின்ற மகாதவசியே அரங்க மகானே எளியவர்களுக்கும் இரங்கி இரக்கம் காட்டி அருள் செய்து காக்கின்ற மகாதேவனே அரங்கமகானே மகா ஞானியே உலகினில் உள்ள மனிதர்கள் ஆட்சியை மாற்றி அவர்களை ஞானவழி செலுத்தி ஞானவான்களைக் கொண்டு முருகப்பெருமான் தலைமையில் ஞானஆட்சியை உலகினில் நிறுவிடவே முருகப்பெருமானின் அவதாரமாக ஞானமே வடிவாக ஞானதேசிகனாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகாதேசிகனே இவ்வுலகினில் உமது ஆற்றலாக சக்தியாக வெளிவருகின்ற ஞானத்திருவடி நூலிற்கு சார்வரி வருடம் ஐப்பசி மாதத்திற்கான ஆசி நூல்தனை பதஞ்சலி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பதஞ்சலியார்.

உலக மக்களுக்கு வரங்களை அளித்து உலக மக்களையெல்லாம் ஒன்றிணைத்து ஞானஉலகாக அமைத்திட அரும்பெரும் துணிவுமிக்க சேவையை தளராமல் தொடர்ந்து செய்து வரும் ஆறுமுக அரங்கமகா தேசிகரின் உயர்ஞான தர்மசேவைகளை கண்டு உலகின் ஒட்டுமொத்த ஞானியர் படைகளும் ஞானத்தலைவன் முருகப்பெருமானுடன் இணைந்து வேழமுகனாம் விநாயகப்பெருமானாரும், பிரம்மா, விஷ்ணு, சிவன் என்கின்ற மும்மூர்த்திகளும், அவர்களது தேவியர்களும், தேவகணங்களும், ரிஷிகணங்களும், ரிஷிபத்தினிகளும் அரங்க மகானின் தொண்டைக் கண்டு வியந்து வியப்பில் மூழ்கியிருக்க உலகைப் பற்றியுள்ள தர்மத்திற்கு எதிர்மறைகளான செயல்பாடுகளும், எண்ணங்களும் மிகுந்து உள்ள துன்பம்மிக்க இந்த கலியுகத்திலும் இடைவிடாது வற்றாத ஜீவநதி போல தொடர்ந்து தருமங்களை அளவிலாது செய்து வருகின்ற அரங்கமகா ஞானியை, ஆற்றல்மிக்க அரங்க மகானின் சீடர்களை, உலகினில் பெரும் மாற்றங்களை உண்டாக்கும் வல்லமைமிக்க அரங்கரின் ஞானக் கொள்கைகளை உலக மக்களிடம் கொண்டு செல்லும் அற்புத சேவைகளையும் கண்டு வியந்து போற்றி அரங்கமகானின் தர்மத்திற்கும், உலகமாற்ற செயல்பாடுகளுக்கும் உதவும் விதத்திலே மனம் உவந்து அரங்கமகானின் ஏழாம்படை வீடு ஓங்காரக்குடிலின் தேவைகளை அருளி தொண்டர்களையும் காத்து அவர்கள் வேண்டுகோள்களை பூர்த்தி செய்தும் வழிநடத்தி காத்து வருகின்றார்கள்.

இவ்விதமே உலகமகா சக்திகள் எல்லாம் ஒன்று கூடி அரங்கருடன் இணைந்து செய்யும் அரங்க மகானின் தரும சேவைகள் குறைந்து விட்டால் இந்த உலகம் அழிந்துவிடும் என்பதினாலே உலகமக்களுக்கு அள்ளி வழங்கி காக்கும் விதத்தில் அரங்கமகானுக்கு பொருள்வளமும் அருள்வளமும் அருளி அரங்கரின் தவமாக அரங்கருக்கு தக்க துணையாக இருந்து உலகின் தர்மத்தின் சக்தியை பெருக்கி வருகின்றனர்.

உலகமகா சக்திகளும் அரங்கமகானும் இணைந்து செய்யும் தர்மத்தின் பலனால், அரங்கர் கூறும் உயர்ஞான கொள்கைகளால் இந்த உலகம் ஆறுதலும் நல்ல மாறுதலும் கண்டு அழிவிலிருந்து மீண்டு தக்க பாதுகாப்பை பெறும், சகல பாதுகாப்பையும் தந்து காக்கும் ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாக ஆறுமுகப்பெருமானும் அருட்பெரும் சுடரொளி காட்டி உலக மக்களை வழிநடத்தி வருகின்றார்.

ஆதலினாலே ஆறுமுகப்பெருமானே அரங்கமகான் என்றே அரங்கரை குருவாக ஏற்று அரங்கமகானின் கொள்கைகளை ஏற்று கடைப்பிடிக்கும் சமூகமும், நாடும் முருகப்பெருமானின் அருள் சக்தியை அடைந்து பேரிடர்களில் இருந்து தப்பி பிழைக்கும். உலக மக்கள் தங்களுக்குள்ள வேறுபாடுகளை மறந்து ஜாதி மத இன மொழி பேதங்களை கடந்து முருகப்பெருமானை வழிபடு தெய்வமாக ஏற்றுக்கொண்டு முருகப்பெருமான் உலகம் உய்ய அளித்த தூய ஞானநெறியாகிய தயவே வடிவான சன்மார்க்க கொள்கைகளை ஏற்றுக்கொண்டு சன்மார்க்கம்

தழைக்க வழிவகை செய்து அரங்க மகானை பின்தொடர்ந்து வருவதுடன் கலியுக மாயையுள் அகப்படாமல் தப்பித்து அவரவரின் ஆன்ம லாபம் கருதி அவரவரும் முருகப்பெருமானை தினம்தினம் மறவாமல் பூஜை செய்து வரவேண்டும். முருகப்பெருமானின் திருவடியைப் பற்றி பூஜிக்கபூஜிக்க உலகைப் பற்றிய இயற்கை பேரிடர்கள் விலகி, உயிர்ப்பலிகளும் குறைந்து உலகமெங்கும் உயிர் பாதுகாப்பினை முருகப்பெருமானின் அருளால் பெருகிடும், உலகம் சமநிலையை அடையும்.

உலக மக்களே நீங்கள் கடவுளின் பெயராலும் உணவிற்காகவும், பிற காரணங்களுக்காகவும் உயிர்க்கொலை செய்வதை விட்டால்தான் உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்தால்தான் இன்று இவ்வுலகைப் பற்றியுள்ள கலியுக துன்பமாகிய நச்சுக்கிருமி வழியினால் உண்டான கண்டமும் துன்பமும் மக்களை விட்டு விலகும், இயற்கையும் கருணை கொள்ளும், மக்கள் மரணபயம் விலகி அமைதியுடன் வாழ்வர், துன்புறும் மக்களும் மீட்கப்படுவார்கள், முருகப்பெருமானின் அருளால் காக்கப்படுவார்கள்.

இந்த உலகையே மாற்றி ஞானஉலகாக மாற்றும் வல்லமைமிக்க அரங்க மகானின் கொள்கைகளை தாங்கி வருகின்ற குருவருள்மிக்க ஞானத்திருவடி நூலினை வாங்கிப் படிப்பவர்களும் பிறர் படிக்க வாங்கி கொடுப்பவர்களும், வீட்டினில் பூஜையில் வைத்து பூஜிப்பவர்களும் பேரிடரை வெல்லும் ஞானமும், சக்தியும் பெறுவார்கள், ஞானிகளின் துணையைப் பெற்று, சக்தி பெற்று சாகாவரமும் பெறுவர். சரவணஜோதி ஏற்றி மனம் உருகி வழிபாடுகளைச் செய்து வரவர, அவர்களெல்லாம் ஞானியர்கள் தேடிடும் சன்மார்க்க வழியில் வந்திட்ட ஞானிகளாக ஆகிடுவார்கள். அவர்களெல்லாம் அரங்கமகா தேசிகனார் நடத்தும் ஆற்றல்மிக்க உலகப்பெருமாற்றத்தில் பங்கு கொண்டு ஞானஆட்சி காலத்திலும் பங்கு வகித்து அழிவிலா நிலையை அடைந்து பிறவாப் பெரும்பேற்றினை பெற்று சிறப்படைவார்கள். உலகைப் பற்றியுள்ள கலியுக துன்பமெல்லாம் விலகி ஓடும்.

அவதார ஞானி ஆறுமுக அரங்கமகானை அணுகி அணுகி வழிபட்டு வரவர, ஞானயுக மாற்றமானது அரங்க மகானின் தவபூர்த்தி போல விரைந்து உலகினில் உண்டாகிடும் எனக் கூறுகிறார் மகான் பதஞ்சலி முனிவர்.

–சுபம்–

**எல்லா துன்பங்களையும் வென்று வெற்றி காண விரும்புகின்றவர்கள்**
**“ஓம் சரவணஜோதியே நமோ நம”**

என்ற மந்திரத்தை காலை மற்றும் மாலையில் சிறிது நேரம் ஜெபித்து வரவும்.
- மகான் ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

**முருகன் திருவடி வாழ்க**

திருச்சி மாவட்டம், துறையூர், ஓங்காரக்குடிலாசான்,
முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள்
ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க சங்கத்தில்
23.02.1988 அன்று அருளிய அருளுரை

# முருகன் அருள் இல்லையேல் உலகம் இல்லை

ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம
ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம ஓம் அகத்தீசாய நம

அன்புள்ள சன்மார்க்க சங்க அன்பர்களே உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

யோகநெறி என்பது மூச்சுக்காற்றை பூரித்து கும்பித்து தங்குதல் என்பதாகும். ஆசானின் தயவால்தான் வாசி அல்லது மூச்சுக்காற்றைப் பற்றி அறிய முடியும். யோகநெறியைப் பற்றி உணர்ந்து தெளிந்து ஆராய்ந்து அறிவதற்கு ஆசானின் அருட்கடாட்சம் வேண்டும்.

தூலஉடம்பு என்பது நாம் காணுகின்ற உடம்பாகும். தோற்றமாகக் கூடிய உடம்பு தூலஉடம்பு. தூலஉடம்பு என்பது புறஉடம்பு. தூலஉடம்பில் நாள் ஒன்றுக்கு 21,600 முறை மூச்சுக்காற்று வந்து போகும்.

நாள் ஒன்றுக்கு 21,600 முறை வந்து போகின்ற மூச்சுக்காற்று தூல உடம்பிற்கா? அல்லது சூட்சும உடம்பிற்கா என்று கேட்டால் யாரும் சொல்ல முடியாது. இந்த தூல உடம்பில் ஓடுகின்ற காற்றை சூட்சும உடம்பிற்குள் எப்படி செலுத்துவது என்று கேட்டால் யாருக்கும் தெரியாது. அதைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஆசான் அகத்தீசர் தயவு வேண்டும்.

ஆரம்பத்தில் ஆசானின் திருவருளால் சரியை, கிரியைப் பற்றி அறிந்தேன். இப்பொழுது யோகத்தைப் பற்றி ஆசான் திருவருளால் அறிந்து கொண்டேன். ஆசானின் திருவருள் துணைகொண்டு ஞானத்தைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

தூலஉடம்பில் நடைபெறுகின்ற இந்த மூச்சுக்காற்று இயக்கத்தை, சூட்சும உடம்பிற்குள்ளே செலுத்த வேண்டுமென்று ஆசான் கட்டளையிட்டார். அதை அவரே எனக்கு நடத்திக் கொடுத்தார். ஆசான் 26.04.1979 அன்றுதான் எங்களுக்கு ஆசான் வாசி நடத்திக் கொடுத்தார். சாட்சாத் பரப்பிரம்ம சொரூபியாகிய ஆசான் சுப்பிரமணியர் என்னை சார்ந்திருந்து வாசி நடத்திக் கொடுத்தார். அப்படி எனக்கு வாசியை நடத்திக் கொடுத்த பிறகுதான் மற்றுமோர் உடம்பு உள்ளது என்பதை அறிந்தேன். உடம்பிற்குள்ளே இன்னுமோர் உடம்பு இருக்கிறது என்பதை அறிந்தேன்.

காற்றின் இயக்கமே ஆன்மாவின் இயக்கம். அந்த இயக்கத்தை கொண்டு சென்று சூட்சும தேகத்தில் செலுத்த வேண்டுமென்கிற இரகசியத்தை அவர் சொல்லிக் கொடுத்தார். அப்பொழுதுதான் கள்வன் என்ற தத்துவத்தை அறிந்தேன்.

நம்மை வஞ்சிக்கக் கூடியவன் மும்மலமா? அல்லது அறியாமையா? என்று கேட்டால் உண்மைப் பொருளை அறியாத மனதிற்கு கள்வன் என்று பொருள், வஞ்சகம் நிறைந்தது என்று பொருள். உண்மைப் பொருளை அறிந்தால் வஞ்சகம் நீங்கும்.

**காயப்பை யொன்று சரக்குப் பலவுள**
**மாயப்பை யொன்றுண்டு மற்றுமோர் பையுண்டு**
**காயப்பைக் குள்நின்ற கள்வன் புறப்பட்டால்**
**மாயப்பை மண்ணா மயங்கிய வாறே.**

**– திருமந்திரம் – உடலில் பஞ்சபேதம் – கவி எண் 2122.**

**காயப்பை யொன்று சரக்குப் பலவுள** – எழுபத்திரண்டாயிரம் நாடி நரம்புகளும், எலும்புகளும் மற்றும் பல்வேறு கருவி கரணங்களும் சேர்ந்த ஒன்று இந்த புறஉடம்பு. இந்த புறஉடம்பை பை என்று சொல்கிறார். அதிலே சரக்கு பலவுள என்கிறார்.

**மாயப்பை யொன்றுண்டு மற்றுமோர் பையுண்டு** – மாயம் என்றால் அநித்தியம் என்று பொருள்படும். விரைவாக அழியும், மாயமாகிவிடும்.

**நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்**
**பெருமை உடைத்துஇவ் வுலகு.**

**– திருக்குறள் – நிலையாமை – குறள் எண் 336.**

நேற்று இருந்தான் இன்று இல்லை என்னும் பெருமையை உடையது இவ்வுலகு என்கிறார் மகான் திருவள்ளுவர். இந்த உடம்பு எந்த நேரத்தில் வீழ்ந்துவிடும் என்பது நமக்குத் தெரியாது. இந்த உடம்பு எப்போது நமக்கு கைகொடுக்கும், எப்பொழுது நம்மை வஞ்சிக்கும் என்பது நமக்குத் தெரியாது. அதனால்தான் மாயப்பை என்று இந்த உடம்பை சொல்கிறார்.

**மண்ணொன்று கண்டீர் இருவினைப் பாத்திரந்**
**திண்ணென் றிருந்தது தீயினைச் சேர்ந்தது**
**விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணாவபோல்**
**எண்ணின்ற மாந்தர் இறக்கின்ற வாறே.**

**– திருமந்திரம் – யாக்கை நிலையாமை – கவி எண் 143.**

**மண்ணொன்று கண்டீர்** – மண்ணையும் தண்ணீரையும் சேர்த்து பிசைந்து களிமண்ணாக்கினான். அந்த களிமண்ணைக் கொண்டு செய்த

மண்பாண்டத்தை சூளையில் வைத்து சுட்டவுடன் அந்த மண்பாண்டம் திடமானது.

மண்பாண்டம் செய்வதற்கு களிமண்ணோடு தண்ணீரை அவசியம் சேர்க்க வேண்டும். தண்ணீர் இல்லாமல் தனித்த மண் கொண்டு மண்பாண்டம் செய்ய முடியாது. மீண்டும் மழை பெய்தவுடன் அந்த மண்ணால் செய்யப்பட்ட மண்பாண்டம் கரைந்தது. அதுபோன்று இயற்கையால் தோற்றுவிக்கப்பட்ட உடம்பை, அதே இயற்கை கொன்றுவிடும். எந்த இயற்கை நம்மை தோற்றுவித்ததோ அதே இயற்கை நம்மைக் கொன்றுவிடும். இதை யாரும் அறிந்து கொள்ளவில்லை.

**மண்ணொன்று கண்டீர் இருவினைப் பாத்திரம்** – இருவினைப் பாத்திரம் என்பது தூலதேகம், சூட்சுமதேகம் ஆகும். நாம் புறத்தே காணுகின்ற உடம்பு தூலதேகம் என்றும், சிறப்பறிவால் காணக்கூடியது சூட்சுமதேகம் என்றும் சொல்வார்கள். இந்த தூலஉடம்பின் துணை கொண்டே சூட்சுமதேகத்தை காத்து ரட்சிக்கிறான். தூலஉடம்பின் துணை கொண்டே அகஉடம்பை பாதுகாக்கக் கூடிய அறிவு இவனுக்கு இருக்க வேண்டும். அப்படியிருந்தால் அவன் ஞானியாக முடியும். அப்படியில்லையென்றால் புறஉடம்பை உறுதியென்று நம்பி இவன் இருப்பான். அதனால் தீவினை சேரும்.

**திண்ணென் றிருந்தது தீயினைச் சேர்ந்தது** – மண்ணால் பிடிக்கப்பட்ட உருண்டையை உறுதியென்று நம்பாதீர்கள். இந்த புறஉடம்பு இருக்கும்பொழுதே நீங்கள் ஆக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் ஆன்மலாபத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

**நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்**
**கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்**
**சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்**
**மற்றொன் றிலாத மணிவிளக் காமே.**

**– திருமந்திரம் – கல்வி – கவி எண் 292.**

**நிற்கின்ற போதே** – நாம் உயிருடன் இருக்கும்பொழுதே நமது ஆன்மாவிற்கு ஆக்கத்தை தேடிக் கொள்ள வேண்டும். தெளிவான அறிவு வளரவளர ஆன்மாவிற்கு ஆக்கம் வளர்ந்து கொண்டே இருக்கும். அறிவு மழுங்கமழுங்க ஆன்மா மழுங்கிப் போகும். ஆன்மலாபத்தை பெருக்கிக் கொள்வதற்கு தெளிந்த சிந்தனை வேண்டுமா? அல்லது கற்ற கல்வியைக் கொண்டு வளர்த்துக் கொள்வதா? அல்லது கனிவு மிகுந்த திருவடியை தொழுது ஆன்மலாபத்தை பெற்றுக் கொள்வதா? என்றால் கனிவு மிகுந்த திருவடியை தொழுதுதான் ஆன்மலாபத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

**திண்ணென் றிருந்தது தீயினைச் சேர்ந்தது** – இந்த தேகத்தை உறுதியென்று நம்பியதால் தீவினை சேர்ந்தது என்கிறார். இந்த உடம்பு அநித்தியமானது என்பதை அறிந்து நித்தியமான பொருளை நாடி செல்ல வேண்டுமென்ற அறிவு மிளிருமேயானால் அது ஆன்மலாபத்திற்கு ஆக்கத்தை தரும்.

**விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணாவபோல்** – மீண்டும் மண்ணானது போன்று என்றால் முன்னே மண்ணாகத்தான் இருந்தது.

**எண்ணின்ற மாந்தர் இறக்கின்ற வாறே** – இப்படியெல்லாம் கணக்கில்லாத மக்கள் சாகிறார்கள்.

மக்களே நீங்களெல்லாம் புரிந்து கொள்ளாமல் இருக்கிறீர்களே! இருவகைப் பாத்திரம் என்பதை நீங்களெல்லாம் புரிந்து கொள்ளவில்லையே. முன்பே தெரிந்திருந்தால் அந்த பாத்திரத்தை பாதுகாத்துக் கொள்வோம் அல்லவா!

ஒன்று உங்களுக்கு சிறப்பறிவு இருக்க வேண்டும். அப்படி இருக்க முடியாது. காரணம் புறத்தே காணுகின்ற பொருட்கள் மட்டுமே உங்களுக்கு புலப்படும். அகத்தில் காணுகின்ற ஒன்றை நீங்கள் அறியவில்லை.

**நில்லாத வற்றை நிலையின என்றுஉணரும்**
**புல்லறி வாண்மை கடை.**

**– திருக்குறள் – நிலையாமை – குறள் எண் 331.**

அநித்தியமான ஒன்றை நித்தியம் என்று கருதுகின்ற அறிவு எதுவோ அதுவே புல்லறிவு என்கிறார். நிலையில்லாத ஒன்றை நிலையென்று மயங்குகின்ற மயக்கம் எதுவோ அதுவே புல்லறிவு என்கிறார். இந்த உண்மையை நீங்களெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

**காயப்பை யொன்று சரக்குப் பலவுள**
**மாயப்பை யொன்றுண்டு மற்றுமோர் பையுண்டு**
**காயப்பைக் குள்நின்ற கள்வன் புறப்பட்டால்**
**மாயப்பை மண்ணா மயங்கிய வாறே.**

**– திருமந்திரம் – உடலில் பஞ்சபேதம் – கவி எண் 2122.**

இந்த காயப்பை வீழ்ந்தால், அந்த மாயப்பையும் வீழ்ந்து விடும். எந்த உடம்பை பாதுகாத்துக் கொள்ள தவறினானோ அந்த உடம்பும், சூட்சுமதேகமும் வீழ்ந்துவிடும்.

**காயப்பைக் குள்நின்ற கள்வன் புறப்பட்டால் மாயப்பை மண்ணா மயங்கிய வாறே** – கள்வன் என்றால் வஞ்சகன், திருடன். உயிர் நம்மை

வஞ்சிக்கக் கூடியது. இதை அறிந்து கொள்வதற்கு ஞானிகள் திருவடியை நீங்கள் பற்ற வேண்டும்.

**வேட்கை மிகுத்தது மெய்கொள்வார் இங்கிலை**
**பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது**
**நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்**
**காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே.**

**– திருமந்திரம் – செல்வ நிலையாமை – கவி எண் 175.**

**வேட்கை மிகுத்தது மெய்கொள்வார் இங்கிலை –** ஆசை நாளுக்கு நாள் அதிகரித்ததால் பந்தபாசத்தில் அகப்படுவான். அதனால் உண்மை அறிவு நாளுக்குநாள் மழுங்கிவிடும். இதிலிருந்து விடுபட அறிவை தட்டி எழுப்ப வேண்டும் என்கிறார். இதற்கு உபாயம் என் பாதமே உனக்கு துணை என்கிறார். மழுங்குகின்ற அறிவை தட்டி எழுப்புகின்ற உபாயம் ஞானிகளிடத்து உண்டு.

**வேட்கை மிகுத்தது மெய்கொள்வார் இங்கிலை –** ஆசை மிகுந்ததினாலே மெய் என்று சொல்லப்பட்ட உண்மைப்பொருளை நீ கைவசப்படுத்தவில்லை.

**காயப்பைக் குள்நின்ற கள்வன் புறப்பட்டால் –** உடம்பிற்குள்ளே இருக்கின்ற வஞ்சகன் என்று சொல்லப்பட்ட ஆன்மா நீங்கிவிட்டால் இவன் இறந்து போவான். அப்படி வெளியே போகின்ற ஆன்மாவை என்ன செய்ய வேண்டுமென்று யோகிகளுக்குத்தான் தெரியும்.

**பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது –** பூட்டுந் தறியைப் பற்றி யோகிகள்தான் அறிய முடியும். ஆன்மா என்று சொல்லப்பட்ட அணுவில் அணுவை, அண்டத்தை யோகிகள் அறிவார்கள். ஆன்மா விரிந்தால் அண்டமாக விரியும், ஒடுங்கினால் அணுவாக ஒடுங்கும்.

அப்படிப்பட்ட ஆன்மாவை கட்டி புருவமத்தியில் செலுத்துகின்ற ஆற்றல் உனக்கு கிடைத்தால், நீ இந்த உடம்பையும் உயிரையும் நிலைப்படுத்திக் கொள்ளலாம் என்கிறார். இதற்கு தினம்தினமும் ஞானிகளை பூஜை செய்ய வேண்டுமென்று ஆசான் சொல்வார்.

**பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது –** பூட்டுந்தறி என்கிற கட்டுத்தறியைப் பற்றி நாங்கள் உங்களுக்கு சொல்ல வேண்டும். அது நியாயமே. நாங்கள் சொல்வதைக் கேட்டு பூட்டுந் தறியாகிய இரகசியத்தை நீ அறிந்து கொள்ள வேண்டும்.

ஒன்பது வழியாக போகின்ற இந்த மூச்சுக்காற்றை கட்டினால், அந்தக் காற்று அங்கும் இங்கும் செல்ல முடியாது தடுமாறும். உடம்பில் மென்மையான பகுதி வழியாக வெடித்து வெளியேறும். அதனால் மரணம் ஏற்படும்.

புருவமத்தியில் அந்தக் காற்று ஒடுங்கிவிட்டால் நமக்கு ஞானவாழ்க்கை அமையும்.

**மாயப்பை யொன்றுண்டு மற்றுமோர் பையுண்டு** – அந்த சூட்சுமப் பையில் சென்று அந்தக் காற்று அடங்க வேண்டும்.

**நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின் காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே** – இந்த உலகத்திலே வாழ்வதற்காக நம்மை அனுப்பிய தாய்தந்தையரும் சுற்றத்தார்களும் அந்திம காலத்திலே கைவிட்டு விடுவார்கள்.

நூறு கோடி ஆண்டுகளை ஒரு நொடிப்பொழுதாக வாழக்கூடிய ஆற்றலைப் பெற்ற பெருந்தகையாளனே! தலைவா! நீங்கள் எழுதி வைத்த சுவடியை நான் கண்டு, அதன் படி நடக்க எனக்கு அருள் செய்ய வேண்டுமென்று ஆசானை பூஜித்து கேட்க வேண்டும். அந்த சுவடி படிப்பவர் இதயத்திலும், அவர் நாவிலும் தங்கியிருந்து எனக்கு சொல்ல வேண்டுமென்று கேட்க வேண்டும். இப்படியெல்லாம் கேட்டுத்தான் இந்த இரகசியத்தை அறிய முடியும். ஓராண்டு பூஜை செய்து ஆசானை வணங்கினால் சுட்டிக்காட்டப்படும்.

ஞானிகள் அருளிய சுவடியை பார்ப்பதற்கு ஓராண்டிற்கு முன்னே "நான் உண்மைப் பொருளை உணர்வதற்கு ஆசைப்படுகின்றேன். முக்காலமும் உணர்ந்த மாபெரும் யோகிகள் அருளிய சுவடிகள் இருக்கிறது. அந்த நூல்களை படித்து அறிந்து கொள்ள ஆசைப்படுகின்றேன். அந்த நூல்கள் எனக்கு நல்லபடியாக அமைய அருள் செய்ய வேண்டும்" என்று கேட்க வேண்டும். அந்த நூல் எனக்கு நல்லபடி அமைய வேண்டுமென்று ஆசானை கேட்க வேண்டும்.

"முக்காலமும் உணர்ந்த முனிவனே! உங்களுடைய திருக்கரத்தால் எழுதிய ஓலைச்சுவடியை படித்து அறிந்து தெளிந்து கொள்ள ஆசைப்படுகின்றேன்" என்று ஓராண்டு ஆசான் அகத்தீசரை பூஜை செய்து கேட்க வேண்டும். இப்படி கேட்ட பின்புதான் சுவடி பார்க்க செல்ல வேண்டும். அப்படி சென்றால் அடுத்தடுத்து நாம் என்ன செய்ய வேண்டுமென்ற பாதையை ஆசான் வகுத்து தருவார். இதுதான் சிறப்பு.

பிராணாயாமம் செய்வதற்கு முன்பே இப்படியெல்லாம் ஆசானை கேட்டு சுவடி பார்த்து அறிந்து கொள்ள வேண்டும்.

**காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே** – இவன் இந்த உலகத்தில் வாழ்வதற்கு காரணமாக இருந்த தாய்தந்தையர், சுற்றத்தார் கைவிட்டு விட்டார்கள். இவனுடைய தலையெழுத்து இதோடு முடிந்துவிட்டது என்று கைவிட்டு விடுவான்.

**காயப்பைக் குள்நின்ற கள்வன் புறப்பட்டால்** – கள்வன் புறப்பட்டு

விட்டான். ஏன் அவன் கள்வன் ஆனான்? வஞ்சகன் ஆனான்? திருடன் ஆனான்? என்றால் அவனை நீ அறிந்து கொள்ளவில்லை. ஏன் அவன் கள்வனாக மாறினான்? ஏன் ஆன்மாவிற்கு கள்வன் என்ற பட்டத்தை தந்தான். உடம்பில் மாசு இருப்பதால் ஆன்மாவிற்கும் மாசு வந்தது. உன்னுடைய உடம்பு காமதேகம். அது மும்மலத்தால் ஆனது. அதனால் அதில் இருக்கின்ற ஆன்மாவும் கள்வன்தான் என்று சொன்னார். உடம்பைப் பற்றியுள்ள மாசை நீக்குவதற்கு மகான் திருமூலதேவர் பாதத்தை பற்று என்று சொல்கிறார்.

ஆன்மா தோன்றி கணக்கிலடங்காத ஆண்டுகள் ஆனது. ஆன்மா தோன்றி எத்தனை கோடி ஆண்டுகள் ஆனது என்று கணக்கெடுத்தாலும் அது கணக்கில் அடங்காது. உடம்பு கருவில் தோன்று முன்னே அழியும் அல்லது சில மாதங்களில் அழியும் அல்லது தோன்றி சில வருடங்களில் அழியும் அல்லது எண்பது வருடங்கள் வாழ்ந்த பின் இந்த உடம்பு அழியும். ஆனால் ஆன்மா தோன்றிய அன்று முதல் இன்று வரை அப்படியே இருக்கும், ஆன்மா பரிணாம வளர்ச்சிக்கு உட்படாது.

உடம்பு கள்வனாக இருப்பதாலும், உடம்பை மாசு பற்றியுள்ளதாலும் ஆன்மாவைப் பார்த்து கள்வன் என்று சொல்கிறார்.

**மாயப்பை மண்ணா மயங்கிய வாறே –** உடம்பு மாயப்பை. இந்த உடம்பு வஞ்சனையை செய்யும். இந்த உடம்பு மாசாக உள்ளது. இந்த மாசை நீக்குவதற்கு பிராணாயாமம் அவசியமாகும்.

யோகிகள் தினமும் ஆசானை பூஜை செய்து அடியேனுக்கு ஞானம் சித்திக்க வேண்டும், ஞானம் சித்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டே வருவார்கள். இந்த உலகத்தில் உண்மையான ஆசான் யார்? என்று தெரியவில்லை. இருப்பவனும் காரிய குருவாக இருக்கிறான். உண்மைப்பொருள் அறியாத மூடனாக இருக்கிறான். என்னை இவன் வழிநடத்திச் செல்வானா? இவனை எப்படி நம்புவது. அப்படியே இவன் என்னை வழி நடத்தி சென்றாலும் பாழுங்கிணற்றில் தான் தள்ளிவிடுவான்.

ஆசானை தினமும் பூஜை செய்து, உண்மை பொருள் உணர்ந்த குரு எனக்கு வேண்டும். எனக்கு தாங்கள்தான் சுட்டிக் காண்பிக்க வேண்டும், அப்படி இல்லையென்றால் சுவடி மூலம் எனக்கு அருள் செய்ய வேண்டுமென்று கேட்க வேண்டும். சொற்குரு யாரென்று எனக்கு தெரியவில்லை? என்னை வழிநடத்தி செல்கின்ற உண்மைப்பொருள் உணர்ந்த குரு யாரென்று எனக்கு உணர்த்த வேண்டுமென்று ஆசானிடம் கேட்க வேண்டும். அப்படி உண்மைப் பொருள் உணர்ந்த குரு இருந்தால் எனக்கு சுட்டிக்காட்டுங்கள். அப்படி இல்லையென்றால்

நீரே எனக்கு குருவாக இருந்து சுவடி மூலம் அருள் செய்ய வேண்டுமென்று கேட்க வேண்டும்.

அடியேனுக்கு ஞானம் சித்திக்க அருள் செய்ய வேண்டுமென்று ஆசானிடம் கேட்க வேண்டும். இப்படி ஓராண்டு ஈராண்டு அல்ல, பல ஆண்டுகள் ஆசானிடம் கேட்டு வந்தேன். ஒன்பது வயதிலேயே நான் இறைவழிபாடு செய்தேன். ஒன்பது வயதிலேயே சூரியனை பார்த்து நிஷ்டை மேற்கொண்டேன், தவம் மேற்கொண்டேன். எப்படியோ என் பூஜையை ஆசான் ஏற்றுக்கொண்டார்.

அதன்பிறகு நாற்பது ஆண்டுகளுக்கு பிறகுதான் சுவடி பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. ஆரம்பத்தில் ஆசான் சுப்பிரமணியர் சுவடி பார்த்தோம், பிறகு ஆசான் அகத்தீசர் சுவடி பார்த்தோம். இப்படி பல மகான்களின் சுவடிகளை பார்த்தோம். அப்பொழுது அந்த சுவடியில் பிராணாயாமம் என்ற யோகநெறியை நீ செய்யலாம் என்று எனக்கு அருள் செய்தார்கள்.

பிராணாயாமம் அல்லது யோகநெறி மேற்கொள்கின்ற மக்கள் உப்பில்லாத உணவை சாப்பிட வேண்டும். அது எவ்வளவு ஆண்டுகள்? எந்த உணவு? அதை எப்படி செய்து சாப்பிட வேண்டும் என்பது எனக்கு தெரியாது.

ஆசான் சுப்பிரமணியர்தான் எனக்கு முதன்முதலில் சுவடி மூலம் அறிவுரை சொன்னார். அடுத்து ஆசான் அகத்தீசர் நூல் பார்க்கும்போது, உலகப்பெருந்தலைவன் ஈசன் உனக்கு நூல் சொல்லியிருக்கிறார், தீட்சை சொல்லியிருக்கிறார். அதைப் பார்த்து அதன்படி நடந்து கொள்ள வேண்டுமென்று ஆசான் அருள் செய்தார்.

அப்போது ஆதிசிவன் என்று சொல்லப்பட்ட உலகப்பெருந்தலைவன் ஈசன் சுவடி பார்த்தோம். அதில் நீ பிராணாயாமம் செய்ய வேண்டுமென்று உத்தரவு வந்தது. உதயத்திலும், காலையிலும் பிராணாயாமம் செய்ய வேண்டும். பிராணாயாமம் செய்ய வேண்டிய முறையையும் சொல்லி தந்தார்.

பிராணாயாமம் என்கிற வாசிப் பயிற்சியை மேற்கொள்ளும் போது ஏற்படும் வெப்பத்தை தணிப்பதற்கு என்ன உபாயம் என்று கேட்டோம்?

நீ சந்தோசமாக இருந்தாலும் சரி, மகிழ்ச்சியாக இருந்தாலும் சரி நீ அறியாமலேயே மூச்சுக்காற்று இயக்கம் நடந்து கொண்டே இருக்கும். இதை கவனித்தால் காற்று விரைவாக ஓட ஆரம்பிக்கும். அதன் காரணமாக கருவி கரணங்களின் வெப்பம் ஏற்படும், ரத்தத்தில் உஷ்ணம் ஏற்படும். அதன் காரணமாக மலச்சிக்கல் உண்டாகும். மலச்சிக்கல் ஏற்பட்டால் ரத்த அழுத்தம் உண்டாகும்.

யோகிகள் தினம்தினம் பூஜை செய்து வந்த காரணத்தினாலே உடம்பில் ஏற்படும் உஷ்ணத்தைத் தணிப்பதற்கு வல்லாரை சூரணத்தை திரிகடுகு பிரமாணம் சேர்ப்பார்கள். இது ஆசான் தயவு இருந்தால்தான் நடக்கும். மேலும்

சத்திசாரணை வேரை நன்றாக நிழலிலே உலர்த்தி சூரணம் செய்து சர்க்கரை சமஅளவு சேர்த்து திரிகடுகு பிரமாணம் சேர்ப்பார்கள். இப்படி காலை மாலை சூரணத்தை சாப்பிட்டு பசும்பால் அருந்தி வருவார்கள்.

அப்பொழுதும் வெப்பம் தணியாமல் மலச்சிக்கல் வந்தால், பாசிப்பயறு மற்றும் பழங்கள் சேர்த்துக் கொள்ளச் சொல்வார்கள். உப்பில்லாத உணவு ஆயிற்றே என்னால் உணவையும் சாப்பிட முடியவில்லையே நான் என்ன செய்வேன்? என்று மகான் நந்தீசர் சுவடி பார்க்கும்போது, உணவை வைத்துக் கொண்டு என்னை பூஜை செய்து சாப்பிடு என்று சொன்னார். உணவை வைத்துக்கொண்டு பூஜை செய்தபின் சாப்பிடும்போது அந்த உணவில் ஒருவகையான சுவை ஏற்படும். அதனால் அந்த உணவை சாப்பிட முடியும். இப்படி சாப்பிடுவதற்கான முறையை ஆசான் நந்தீசர் எங்களுக்கு அருள் செய்தார்.

யோகிகளுக்கு பாசிப்பயறு, பச்சரிசி, பசும்பால், பசு நெய் உணவில் சேர்க்க வேண்டும், வேர்க்கடலை சாப்பிடலாம். உணவை மிகுதியாக சேர்த்தால்தான் உடம்பில் ஏற்படும் உஷ்ணத்தை தணிக்க முடியும். இல்லாவிட்டால் மலச்சிக்கல் வந்துவிடும். மேலும் வல்லாரை சூரணம், சத்திசாரணை சூரணம் போன்றவற்றையும் சேர்க்க வேண்டும். அப்போதுதான் ஏற்படுகின்ற உஷ்ணத்தை தணிக்க முடியும்.

பிராணாயாமம் செய்கிற யோகிகளுக்கு பாசிப்பயிறு மிகவும் நல்லது. துறவறத்தானுக்கு பாசிப்பயறு மிகப்பெரிய கற்பம். உண்ணுகின்ற பழங்களும் தவத்திற்கு விரோதமான பழங்களாக இருக்கக் கூடாது. மாம்பழம் பிறகுதான் சேர்த்துக் கொள்ள வேண்டும். வாழைப்பழம்தான் தவத்திற்கு உற்ற பழமாகும். தேகத்திற்கு பொருத்தமான உணவுகளையும் கனிவர்க்கங்களையும் சேர்த்து தவம் மேற்கொள்ள வேண்டும். இப்படி படிப்படியாக முன்னேற வேண்டும்.

தவம் மேற்கொள்ளும்போது ஏற்படும் உஷ்ணத்தால் நீர்கடுப்பு உண்டாகும். அதை சரி செய்வதற்கு படிகார பஸ்பத்தை, இளநீரில் சேர்த்து சாப்பிட வேண்டுமென்று ஆசான் அருள் செய்தார்கள். இவ்வளவு பாதுகாப்பையும் இந்த உடம்பிற்கு செய்து கொள்ள வேண்டும். இதுவும் ஆசியில்லாவிட்டால் இவனால் உணர முடியாது. இப்படிப்பட்ட முறைகளையெல்லாம் பின்பற்றிதான் ஞானத்தைப் பெற முடியும்.

ஆதி தலைவன் சிவபெருமானிடம் நான் தீட்சை மேற்கொண்டேன். எனக்கு கிட்டத்தட்ட 160 மகான்கள் சுவடி சொல்லியிருக்கிறார்கள். எங்களுக்கு தமிழகம் முழுவதும் உள்ள சுவடிகளில் இருந்து செய்தி வரும். 17.09.1976 அன்று தீட்சை மேற்கொண்டோம். அதன் பிறகு இரண்டரை ஆண்டுகளுக்கு பின்பு 26.04.1979 அன்று ஆதிதலைவன் சுப்பிரமணியர் என்னை சார்ந்திருந்து வாசி நடத்திக் கொடுத்தார்.

இந்த முறையை நீங்கள் பின்பற்ற வேண்டுமென்றால், சுவடியின் மூலமாக இந்த உண்மையை நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகின்றேன், நீங்கள் அருள் செய்ய வேண்டுமென்று கேட்க வேண்டும். ஒரு தீபம் ஏற்றி வைத்து வீழ்ந்து வணங்கி இன்று நான் சுவடி பார்க்க செல்கிறேன். சுவடி பார்ப்பவரின் அகமும் புறமும் தங்கியிருந்து, அவர் நாவிலே தங்கியிருந்து எனக்கு அறிவுரை வழங்க வேண்டுமென்று கேட்க வேண்டும்.

என்னுடைய தகுதி என்ன என்பது எனக்குத் தெரியாது. இருந்தாலும் பெருமைக்குரிய ஒன்றை நான் விரும்புகிறேன். நீர் அடைந்த பேரின்பத்தை நான் அடைய வேண்டுமென்று ஆசானை கேட்க வேண்டும்.

**உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல்; மற்றுஅது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து.**

**– திருக்குறள் – ஊக்கம் உடைமை – குறள் எண் 596.**

நினைப்பதை உயர்வாக நினைக்கலாம். அது கைகூடாவிட்டாலும் ஒன்றும் தவறில்லை.

**உள்ளுவது எல்லாம் உயர்வுஉள்ளல் –** நமது சிந்தனையெல்லாம் உயர்வாக இருக்க வேண்டும்.

**மற்றுஅது தள்ளினும் தள்ளாமை நீர்த்து –** அது கைகூடாவிட்டாலும் பரவாயில்லை.

ஒன்றைப் பற்றி விடாது சிந்தித்தால் அது அவனுக்கு கைகூடும். கடினமான ஒன்றாக இருந்தாலும் அடைய வேண்டுமென்ற எண்ணம் உனக்கு இருக்குமேயானால் அந்த எண்ணமே உனக்கு கை கொடுக்கும். அதேசமயத்தில் உன்னுடைய எண்ணம் மட்டும் கை கொடுக்காது, அதற்கு அந்த எண்ணத்தை நிறைவேற்றிக் கொடுக்கக் கூடிய ஆசானுடைய பாதம் உனக்கு துணையாக இருக்க வேண்டும். இதற்கு பூஜை செய்து சுவடி பார்த்தால், அதில் பின்பற்ற வேண்டிய முறைகளைப் பற்றிய விளக்கம் தெரியவரும்.

சில அன்பர்கள் பிராணாயாமம் மேற்கொண்டு மூச்சுக்காற்றை இழுத்து நிறுத்துகிறார்கள். இதனால் துன்பம் வருமா என்று கேட்கிறார்கள்? அல்லது இதற்கு வேறு ஏதேனும் நல்ல முறை உள்ளதா? அந்த முறையைப் பற்றி தயவு கூர்ந்து விளக்குங்கள் என்று கேட்கிறார்கள். அதற்குண்டான இயமநியமங்களையும் விளக்கி சொல்லுங்கள் என்கிறார்கள்.

பிராணாயாமம் என்கிற வாசிப்பயிற்சியாகிய யோகநெறியை பின்பற்றுகின்றவர்களுக்கு நாங்கள் சொல்லுகின்ற கருத்துகள் சிறந்த அறிவுரையாகும். உன்னுடைய உடம்பின் சூழ்நிலை என்ன? எந்த அளவிற்கு

வாசியை நீ கட்டலாம்? வாசியை இழுத்து நிறுத்தும்போது ஏற்படுகின்ற உஷ்ணத்தால் வருகின்ற நோய்களுக்கு என்ன பரிகாரம்? உன்னுடைய உடம்பிற்கு என்னென்ன மூலிகைகளை சேர்க்க வேண்டும்? என்னென்ன மூலிகைகளை சேர்த்தால் தவத்தை முடிக்க முடியும்? என்று ஆராய்ந்து பார்த்து சுவடி மூலமாகவோ அல்லது சொற்குரு மூலமாகவோ அறிந்து கொள்ள வேண்டும்.

சுவடி மூலம் அறிவுரை சொல்பவர் சற்குரு. எங்களைப் போன்றவர்கள் சொற்குரு. சற்குரு அல்லது சொற்குரு மூலமாக தெரிந்து கொள்ள வேண்டும்.

பிராணாயாமம் என்கிற வாசிப்பயிற்சியை மேற்கொண்டு சித்தி பெற்றவர்கள் எண்ணிலடங்கா கோடி. இனி சித்திபெற போகிறவர்களும் எண்ணிலடங்கா கோடி.

ஐயனே மூச்சுக்காற்று என்கிற வாசியைப் பற்றி எனக்குத் தெரியாது. நீரே என்னை சார்ந்து இருந்து எனக்கு அருள் செய்ய வேண்டுமென்று யாரொருவன் ஞானிகள் பாதத்தை பற்றி பூஜித்து கேட்கின்றானோ அவன் ஞானி ஆவான்.

வருங்காலம் ஞானசித்தர் காலம் என்பதால் இந்த கருத்துகளை உங்களுக்கு தெளிவாக சொல்லிக்கொண்டு வருகிறேன். ஆசான் தயவிருந்தால் நீங்களும் ஞானியாகலாம். ஆசான் துணைகொண்டு நீங்களும் ஞானியாகலாம் என்று உறுதியாக சத்தியமிட்டு சொல்கிறேன். வாசி வசப்பட்ட மக்கள் ஞானிகள் துணைகொண்டுதான் சித்தி பெற்றிருக்கிறார்கள் என்பது உண்மையே.

மகான் புலத்தீசர் என்பவர் ஆசான் அகத்தீசருடைய பிரதான சீடர். பெருமைக்குரிய புலத்தீசர் என்று ஆசான் அகத்தீசரே புகழ்ந்து சொல்லியுள்ளார்கள். புலத்தீசர் என்று சொன்னால் ஒளிச்சுடர் என்று பொருள். புலத்தீசர் என்றால் புலனை வென்றவர், உண்மையை உணர்ந்தவர் என்று அர்த்தம். அன்பர்கள் அழைத்தால் அஞ்சேல் என்று அருள் செய்யும் வல்லமை பெற்றவர் மகான் புலத்தீசர். அவர் ஆதி தலைவன் ஆவார். ஆசான் அகத்தீசருடைய உண்மை சீடர் மகான் புலத்தீசர் ஆவார்.

ஆசான் துணையில்லாமல் வாசிப்பயிற்சியை மேற்கொள்கின்ற மக்களுக்கு ஏற்படும் தீமைகளைப் பற்றி இப்போது பேசப்போகிறோம்.

பிராணாயாமம் என்பது வாழ்வதற்காக செய்வது, சாவதற்கு அல்ல. நீ ஏன் பிராணாயாமம் செய்கின்றாய் என்று கேட்டால், நான் சாகாமல் இருப்பதற்காக செய்கிறேன் என்பான். அவனை ஆறுமாதத்திற்கு பிறகு பார்த்தால் வயிறு வீங்கி குனிந்து கொண்டு போவான். முதுகில் வாய்வு தங்கும், வயிற்றில் ஏற்பட்ட உஷ்ணத்தால் வாய்வு உண்டாகி வயிறு உப்பிக்கொண்டிருக்கும், வயிறு வெந்து புண்ணாக இருக்கும். அப்படி குடல் வெந்ததின் காரணமாக உள்ளே வாய்வு அதிகமாக உற்பத்தியாகி வயிறு உப்பிக் கொண்டிருக்கும்.

ஓராண்டிற்குள்ளே அஜீரணக்கோளாறு உண்டாகி கிராணி நோயால் அல்லற்பட்டுக் கொண்டிருப்பான். இளைஞனாக இருந்தால் ஒரு வருடம் உடம்பு தாங்கும். நாற்பது வயதிற்கு மேல் ஆர்வத்தின் காரணமாக மூச்சுக்காற்றை கட்டினால் சீக்கிரம் இறந்து போவான். ஒருவன் பிராணாயாமம் செய்கிறான் என்றால் அவனை இன்சூரன்ஸ் செய்து கொள் என்று நாங்கள் சொல்வோம். நிச்சயமாக உனக்கு முடிவு சீக்கிரம் இருக்கிறது. அதனால் இன்சூரன்ஸ் செய்து கொள் என்போம். இவனுக்கு பின் இவனுடைய பிள்ளைகளுக்கும் மனைவிக்கும் பயன்படும். பிராணாயாமம் செய்ய ஆசைப்பட்டால், குடும்பத்திற்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்துவிட்டு பிராணாயாமம் செய். ஏனென்றால் வெகுவிரைவில் உன்னுடைய காலம் முடியப்போகிறது.

**காணும் மூச்சடக்கி விழியதும் உருட்டிக்**
**கபாலமும் திறந்தனர் கோடி**
**கனத்த வாய்வதனால் குன்மநோய் அணுகி**
**கலங்கினோர் அவர்ஒரு கோடி**
**தோணும் மெய்மறந்து சுழன்று உடன்எழும்பி**
**சொக்கினோர் அவர்ஒரு கோடி**
**சூலை வாய்வு அணுகி சுவாலையும் எழும்பிச்**
**சுரமதால் இறந்தனர் கோடி**
**ஊண உண்நாக்கை அண்ணாக்கையுள் தூக்கி**
**உள்ளடங் கிணர்களுங் கோடி**
**உயர சாண்நீள முழுவதும் எழும்பி**
**ஓங்கியே ஒடுங்கினோர் கோடி**
**பேண அதிசார பேதிவந்து அணுகிப்**
**பிறவியும் இழந்தனர் கோடி**
**பெருமையாய்க் கர்ப்ப சாதனை அறியாது**
**பிராணனும் அழிந்து மாண்டனரே.**

**– புலஸ்தியர் கற்பம் 300–ல் 97.**

**வேட்கை மிகுத்தது மெய்கொள்வார் இங்கிலை**
**பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது**
**நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்**
**காட்டிக் கொடுத்தவர் கைவிட்ட வாறே.**

**– திருமந்திரம் – செல்வ நிலையாமை – கவி எண் 175.**

காற்றை புருவமத்தியில் பூட்டி வைக்க வேண்டிய இவன் ஒன்பது துவாரங்கள் உள்ள பகுதியில் காற்றை நிறுத்துவான். இதனால் நோய் வந்து இவன் இறந்து போவான். இவன் மீது குற்றமில்லை. இவனுக்கு சொல்லிக் கொடுத்தவன் அப்படிப்பட்டவன்.

**ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்**
**நான்கன்றாய் நாடி யழைத்தேனென் நாதனை**
**வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்**
**ஊன்கன்றா னாடிவந் துள்புகுந் தானே.**

**– திருமந்திரம் – பத்தியுடைமை – கவி எண் 2627.**

பசு கன்றிற்கு பால் கொடுக்க மறக்காது. கன்று தன் பசிக்கு எப்படி தாய்ப்பசுவை அழைக்கிறதோ அதுபோல் நான் எனது ஆசான் நந்தீசரை நான் ஞானம் கருதி அழைத்தேன் என்கிறார்.

இங்கே பசுவிற்கும் கன்றிற்கும் உள்ள தொடர்பை சுட்டிக் காட்டுகிறார். கன்று தாய்ப்பசுவை அழைப்பது போன்று எனது ஆசான் நந்தீசரை நான் அழைத்தேன் என்கிறார் மகான் திருமூலர்.

தன் பசிக்கு பால் அருந்துவதற்காக கன்று தாய்ப்பசுவை அழைக்கும். இங்கே நான் எனது ஆசான் நந்தீசரை அழைப்பது ஞானம் கருதி என்கிறார்.

நீ கன்றாக மாறும்போது அவன் தாய்ப்பசுவாக மாறுவான். கன்று காலையில் தாய்ப்பசுவிடம் பால் அருந்தி தன் பசி தீர்ந்தாலும், மாலையில் பசி வந்து பால் குடிக்கும். அதுபோன்று நீ தினமும் ஆசானை பூஜித்து பூஜித்து அழைக்க வேண்டும் என்கிறார். நித்தம்நித்தமும் ஆசானை தொடர்பு கொள்ள வேண்டும் என்கிறார்.

**வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்** – பசுவிற்கும் கன்றிற்கும் இடையே உள்ளது பாசம் ஆகும். ஆனால் நான் விரும்புவது பாசம் கடந்த ஒன்று.

**நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்**
**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்**
**தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.**

**– திருமந்திரம் – திருமூலர் வரலாறு – கவி எண் 85.**

**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**

மேலான ஒரு பொருளாகிய மறைபொருளைப் பற்றி சொல்லிடின் அது ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம் என்கிறார். அது என்ன என்று ஆராய்ந்து பார்க்கும்போது, பரமாத்மாவை கொண்டு ஜீவாத்மா செயல்படுகிறது என்பதை அறிந்தோம்.

**வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்** என்று 2627வது திருமந்திர கவியில் சொல்கிறார். **வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்** என்று 85வது திருமந்திர கவியில் சொல்கிறார்.

**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்** என்பது உடம்பைப் பற்றிய மந்திரம் என்கிறார்.

**தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே** – பற்று என்று சொல்லாமல் பற்றப் பற்ற என்று சொல்கிறார். தலைப்படுதல் என்றால் முற்படுதல் என்று அர்த்தம்.

வெளியே உள்ள பரமாத்மாவை ஜீவாத்மாவோடு சேர்க்க வேண்டும். ஜீவாத்மா என்பது உஷ்ணத்தால் வந்தது. இல்லறத்தில் ஈடுபடும்பொழுது உள்கருவி கரணங்கள் மற்றும் நாடி நரம்புகளில் மலர்ச்சி உண்டாகும். அதன் காரணமாக உஷ்ணம் ஏற்பட்டு சுக்கிலம் சுரோணிதம் வெளிப்பட்டு ஜீவாத்மா உண்டாகும். ஆகவே ஜீவாத்மா உஷ்ணத்தால் உண்டானது. ஆனால் பரமாத்மா என்பது வாயுவினால் வந்தது.

**வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்**
**ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்**

ஜீவாத்மாவோடு பரமாத்மா சாராது. அப்படி சாருமேயானால் கண்டிப்பாக மெய்யுணர்வு மிகும்.

**உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்**
**றுடம்பினை யானிருந் தோம்புகின் றேனே.**

**– திருமந்திரம் – சரீர சித்தி உபாயம் – கவி எண் 725.**

பரமாத்மாவோடு ஜீவாத்மா கலக்கும்வரை, ஜீவாத்மா தங்கியிருக்கும் இந்த தேகத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உடம்பை நீங்கள் இழந்துவிட்டால் ஜீவாத்மா போய்விடும். ஜீவாத்மாவை நீங்கள் இழந்துவிட்டால் பரமாத்மாவை அடைய முடியாது.

எங்கும் வியாபித்திருக்கும் பஞ்சபூதங்கள்தான் பரமாத்மா. ஜீவாத்மாவோடு பரமாத்மாவை சேர்க்கின்ற இடம் வெட்டவெளியாகிய புருவமத்தி ஆகும். புருவமத்தி என்கிற வெட்டவெளியில் ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் ஒன்று சேர்க்க வேண்டும். அந்த புருவமத்தி என்கிற வெட்டவெளிதான் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றுபடுகின்ற இடம். ஜீவாத்மாவோடு பரமாத்மாவை சேர்க்க வேண்டுமென்றால் உடம்பை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்** – அறியாமையின் காரணமாக உடம்பை இழுக்கென்று இருந்தேன்.

இந்த உடம்பு அசுத்தமானது, துர்நாற்றமுள்ளது, கீழ்த்தரமானது என்று

சிலர் சொல்வார்கள். ஆகவே இந்த உடம்பு நமக்கு தேவையில்லை என்று ஒருசிலர் இந்த உடம்பை விட்டுவிட்டு புதிய தேகம் எடுக்கலாம் என்பார்கள். பழைய சட்டையை கழட்டிவிட்டு புதிய சட்டை போடுவது போல என்று சொல்வார்கள். இவர்களெல்லாம் அறியாமையில் உள்ளவர்கள், உடம்பைப் பற்றி அறியாதவர்கள்.

**உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்** – உடம்பைப் பற்றி அறிவதற்கு முன்னே இந்த உடம்பு அசுத்தமானது, கீழ்த்தரமானது என்று எண்ணியிருந்தேன்.

**உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்** – உடம்பிற்குள்ளே உறுதிப்பொருளாகிய மெய்ப்பொருள் இருக்கிறது என்பதை எனது ஆசான் சுட்டிக் காட்டிய பின்தான் கண்டேன்.

**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று** – உடம்பிற்குள்ளே உறுதிப்பொருளாகிய மெய்ப்பொருள் இருக்கின்றது என்று அறிந்த அறிவே எனக்கு உத்தமனாக மாறியது. ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் உத்தமன் சேர்த்து வைத்தான்.

வெளியே உள்ள வெட்டவெளியையும், உள்ளே உள்ள வெட்டவெளியையும் ஒன்று சேர்த்து விட்டால் ஜீவாத்மாவும், பரமாத்மாவும் ஒன்றுபடும்.

ஜீவாத்மா என்பது அநித்தியமானது. பரமாத்மா நித்தியமானது. ஆத்மாவை தாங்கிக் கொண்டிருக்கின்ற உடம்பு அநித்தியமானது. உடம்பை ஒருவன் நித்தியமாக்கிவிட்டால், அந்த உடம்பிலிருக்கின்ற ஆத்மாவும் நித்தியமாகும். ஏனென்றால் அநித்தியத்தில் நித்தியம் சார்ந்திருக்கும். அழியக் கூடிய உடம்பிலே அழியாத ஆத்மா தங்கியிருக்கிறது. உடம்பைக் காப்பாற்றினால் அந்த ஆன்மா தங்கிவிடும்.

உடம்பை பாதுகாக்கக் கூடிய, பண்படுத்தக் கூடிய அறிவை ஒருவன் பெறுவானேயானால், அவன் ஆன்மாவை கட்டிக் காப்பாற்றுவான்.

**உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்**
**உடம்பினுக் குள்ளே யுறுபொருள் கண்டேன்**
**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று**

உறுதிப்பொருளாகிய மெய்ப்பொருளை அறியும்வரை அவன் காமுகனாக இருந்திருக்கிறான். அவனவன் வினைக்கேற்றார்போல் தலைவன் அவனுக்கு வழி கொடுப்பான். நான் நல்வினை செய்திருந்தால் எனக்கு தலைவன் தூய்மையாக பிரகாசமாக காட்சியளிப்பான். நான் பாவியாக இருந்தால் எனக்கு அறியாமை என்கிற இருளாக காட்சியளிப்பான். அவனவன் வினைக்கேற்றார்போல் தலைவன் தோற்றமாவான்.

**உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று** – எனது ஆசான் உடம்பைப் பற்றிய இரகசியத்தை சொன்னார், ஜீவாத்மா, பரமாத்மாவின் இயல்பை சொன்னார், அதை சேர்க்கக் கூடிய முறையைப் பற்றி சொன்னார். அதனாலே அந்த அறிவு எனக்கு உத்தமனானது. காரணம் அவன் என்னுள்ளே தங்கியிருந்தான்.

**உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே** – உடம்பை நான் போற்றுகின்றேன். இந்த உடம்பை உறுதிப்பொருள் என்று அறிந்தேன். தலைவன் இருக்கிறான் என்பதை அறிந்தேன். ஆகையால் இந்த உடம்பை போற்றுகின்றேன்.

உடம்பு நிலையானது அல்ல. எத்தனை ஆண்டுகள் நோய்நொடியில்லாமல் உடம்பை பாதுகாக்க முடியும். நம்மால் முடியுமா? உணவை ஒழித்தால் உயிர் போகும். உணவு கொடுத்தால் உடம்பு வளரும். ஆகவே இது நம் கணக்கிற்கு அகப்படாது. உணவு கொடுத்தால் காமம் மிகுதியாகும், உடல் மாசாகும். உணவு கொடுக்காவிட்டால் இறந்துவிடுவான். இந்த உடம்பை காப்பாற்றக் கூடிய முறை ஒன்று இருக்கிறது.

ஜீவாத்மாவோடு பரமாத்மாவை சேர்த்தால் மட்டும் போதாது. அதை முடி போடுகின்ற இடம் ஒன்று இருக்கிறது.

**நாட்டத்தைக் கண்டா லறியலா குமந்த**
**நாலாறு வாசல் கடக்கலாகும்**
**பூட்டைக் கதவைத் திறக்கலா கும்மிது**
**பொய்யல்ல மெய்யடி வாலைப்பெண்ணே.**

**– கொங்கண நாயனார் – வாலைக்கும்மி – கவி எண் 75.**

**நாட்டத்தைக் கண்டா லறியலாகும்** – எதை நாடியிருப்பது? வெளியில் வெளியை சேர்ப்பதாகும். ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் சேர்க்கக் கூடிய இடம் புருவமத்தி. ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் சேர்க்கக் கூடிய ஒன்றை தட்டி எழுப்புகின்ற மார்க்கம் புருவமத்தி.

ஒன்பது வாசல் உள்ள இந்த உடம்பிற்குள்ளே மூச்சுக்காற்றாகிய ஆன்மா வந்து போகும். இந்த உடம்பு நம்மை வஞ்சிக்கக் கூடியது.

வஞ்சிக்கக் கூடிய ஆன்மாவை புருவமத்தி என்கிற பத்தாம் வாசலில் செலுத்தினால் அது வெளிப்படாது. புருவமத்தியில் ஆன்மா தங்கினால் நிச்சயமாக இந்த உடம்பு பாதுகாக்கப்படும்.

**உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே** – ஓம்புதல் என்றால் பாதுகாத்தல் அல்லது போற்றுதல் என்று பொருள்படும். பத்தாம் வாசலிற்குள்ளே சென்று இந்த தேகத்தை இவன் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில்**
**வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை**
**ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை**
**தேட்டமும் இல்லை சிவனவ னாமே.**

**– திருமந்திரம் – தியானம் – கவி எண் 604.**

**நாட்டம் இரண்டும் நடுமூக்கில் வைத்திடில் –** நடுமூக்கு என்பதை என்பதை தவறாக புரிந்து கொண்டு நுனி மூக்கை பார்ப்பான். அவனுக்கு வெகுவிரைவிலே தலைவலி வந்துவிடும்.

ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் சேர்த்து உந்திக்கமலத்தில் தங்க வைத்து அதை தட்டி எழுப்புகின்ற முறையை ஆசான் திருமூலதேவர் சொல்கிறார். கண்ணை மூடி புருவமத்தியில் கூர்பார்வை செலுத்துகிறான். அப்படி கூர் பார்வை செலுத்துவதால், ஜீவாத்மா பரமாத்மா வெளிப்பட்டு எழும். கீழேயிருந்து உச்சியை நோக்கி மேலே வரும். ஒரு கோடி பிரகாசமுள்ள ஜோதி தோன்றும், அமிழ்தபானம் சிந்தும். இதை ஆசான் தயவில்லாமல் செய்ய முடியாது.

**வாட்டமும் இல்லை மனைக்கும் அழிவில்லை –** வாட்டமும் இல்லை துன்பமும் இல்லை இந்த உடம்பிற்கும் அழிவில்லை.

**ஓட்டமும் இல்லை உணர்வில்லை தானில்லை –** மனம் ஓடாது, ஜோதி கண்டபின் ஓடுமோ? தூங்குவானா அவன்? தூங்கமாட்டான்.

சுகஜோதி வந்த பிறகு தூக்கம் வருமோ? தூக்கம் வராது. கண்ணை மூடியபின் ஒரு கோடி பிரகாசமுள்ள ஜோதி தெரியும். அப்படியே அதிலே இலயித்திருப்பார்கள். இந்த வாய்ப்பு ஆசான் தயவால்தான் வரும்.

**தேட்டமும் இல்லை சிவனவ னாமே –** ஆசானை விட மிகப்பெரிய செல்வமோ, மூலதனமோ இல்லை. ஒரே மெய்யுணர்வு இரண்டற கலந்திருப்பதுதான்.

**எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும்**
**கண்ணார் அமுதினைக் கண்டறி வாரில்லை**
**உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினாற்**
**கண்ணாடி போலக் கலந்துநின் றானே.**

**– திருமந்திரம் – தியானம் – கவி எண் 603.**

**எண்ணா யிரத்தாண்டு யோகம் இருக்கினும் –** ஓராண்டு இரண்டாண்டு அல்ல, பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் யோகம் செய்தாலும் ஆசான் ஆசியில்லாமல் வாசி வசப்படாது. இதை அறியாது பல ஆண்டுகள் மூச்சைக் கட்டி யோகம் செய்வான். எப்போது ஆசான் ஆசியில்லாமல் வாசிப்பயிற்சியை மேற்கொள்கின்றானோ அப்பொழுதே அவன் சாகத் தலைப்படுகின்றான்.

உடற்கூறு தத்துவத்தை நீ பூரணமாக அறியவில்லை. உண்மைப்பொருளை அறிந்த மக்களுக்கு தேகம் மென்மையானது.

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்**
**உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த் தேனே.**

**– திருமந்திரம் – சரீரசித்தி உபாயம் – கவி எண் – 724.**

**உடம்பார் அழியில் உயிரார் அழிவர்** – தேகத்தை பண்படுத்தி அதை அழியாமல் காப்பாற்ற வேண்டும்.

அநித்தியமான உடம்பிற்குள்ளே நித்தியமான உயிரை சேர்ப்பதற்கு ஒரு முறை இருக்கிறது.

**உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினாற்**
**கண்ணாடி போலக் கலந்துநின் றானே.**

உள் நாடி என்பது பிரம்மநாடி.

**எழுபத்தீ ராயிர நாடி யவற்றுள்**
**முழுபத்து நாடி முதல்.**

**– ஔவைக்குறள் – நாடி தாரணை – குறள் எண் 1.**

உடம்பிற்குள்ளே எழுபத்திரண்டாயிரம் நாடி நரம்புகள் உள்ளது. அதிலே முதன்மையானது பத்து நாடி ஆகும்.

இடகலை, பிங்கலை, சுழுமுனை, சிங்குவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குரு எனப்படும் பத்து நாடிகளே எழுபத்திரண்டாயிரம் நாடிநரம்புகளில் முதன்மையான பத்து நாடிகள் ஆகும்.

**நரம்பெனு நாடி யிவையினுக் கெல்லா**
**முரம்பெறு நாடியொன் றுண்டு.**

**– ஔவைக்குறள் – நாடி தாரணை – குறள் எண் 2.**

உரம்பெறும் நாடி எது என்று கேட்டால் அதுதான் ஈஸ்வர நாடியாகும். ஈஸ்வர நாடி என்று சொல்லப்பட்ட பிரம்மநாடியே உரம்பெறு நாடியாகும். இந்த ஈஸ்வர நாடியைப் பற்றி ஆசான் சிவவாக்கியர் சொல்கிறார்,

**உருத்தரித்த நாடியி லொடுங்குகின்ற வாயுவை**
**கருத்தினா லிருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்**
**விருத்தரும் பாலராவர் மேனியுஞ் சிவந்திடும்**
**அருட்டரித்த நாதர்பாதம் அம்மைபாதம் உண்மையே.**

**– மகான் சிவவாக்கியர் – கவி எண் 5.**

**உள்நாடி உள்ளே ஒளிபெற நோக்கினால் –** உடம்பின் உள்ளே உள்ள 98.4 டிகிரி சராசரி வெப்பத்தை கொண்டே இவன் ஜோதியை எழுப்புகிறான். உடம்பில் ஓடும் இரத்தத்தில் உள்ள ஜீவஅணுக்கள் சாகாத அளவிற்கு எழுப்புகின்ற அக்கினியின் அனல் இருக்க வேண்டும். அதற்கேற்ப அக்கினியை ஏற்ற வேண்டும். எவ்வளவு பெரிய இரகசியம் இது? மிகுதியாக அனல் ஏற்றினால் அணுக்கள் இறந்து விடும், அதனால் நோய் வந்துவிடும். இரத்தத்தில் உள்ள ஜீவஅணுக்கள் சாகாமல் அனலை அணுஅணுவாக ஏற்ற வேண்டும். யோகிகளுக்குத்தான் இந்த உண்மை தெரியும். அணுக்கள் செத்தால் உடம்பிற்கு நோய் வந்துவிடும். தலைவன் பாதத்தைப் பற்றி பூஜித்தால் இந்த உண்மை உனக்கு புரியும். இரத்தத்தில் உள்ள ஜீவஅணுக்களுக்கு எந்த அளவிற்கு வெப்பம் தர வேண்டுமென்ற கணக்கு உனக்கு தெரியாது. இந்த இரகசியத்தை ஆசான்தான் உணர்த்த வேண்டும்.

**கண்ணாடி போலக் கலந்துநின் றானே –** கண்ணாடி முன் நிற்கும்போது உனது பிம்பம் எப்படி கண்ணாடியில் தெரிகிறதோ? அப்படி தலைவன் தெரிவார்.

பட்டினி போட்டால் நோய் வந்துவிடும். மிகுதியாக உணவு கொடுத்தாலும் நோய் வந்து இறந்து போவாய்.

**சுட்டிடாதே ஜடத்தை பட்டினிப் போட்டு**
**தூங்காது பாராதே தவம் நேராதே** என்பார்கள்.

கடவுள் தன்மையை அடைய வேண்டுமென்ற ஆர்வத்தின் காரணமாக பட்டினி கிடந்து அல்லற்படுவான்.

**ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்**
**நான்கன்றாய் நாடி யழைத்தேனென் நாதனை**
**வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்**
**ஊன்கன்றா னாடிவந் துள்புகுந் தானே.**

**– திருமந்திரம் – பத்தியுடைமை – கவி எண் 2627.**

கன்று பசியோடு அழைக்கும்போது, கன்றை தேடி பசு வருவது போல், ஆசானை நான் ஞானம் கருதி அழைத்தேன் என்கிறார். ஆசான் வந்து என்னுள்ளே புகுந்தான் என்று சொல்கிறார். நீ ஆசானை சிந்தித்தால், உனது சிந்தனையில் ஆசான் வந்து கலந்துவிடுவார் என்பது இதன் சாரம்.

கன்று பசுவை அழைப்பதைப் போல், நான் ஆசானை அழைத்தேன். கன்றிற்கும் பசுவிற்கும் இடையே இருப்பது பாசம். ஆனால் நான் ஆசானை ஞானம் கருதி அழைத்தேன். எனக்கும் ஆசானுக்கும் இடையே உள்ளது மெய்ப்பொருள் ஆகும்.

**தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோள்**
**தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதந்**
**தவிரவைத் தான்நமன் தூதுவர் கூட்டந்**
**தவிரவைத் தான்பிற வித்துயர் தானே.**

**– திருமந்திரம் – சற்குரு நெறி – கவி எண் 2050.**

**தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோள் –** கன்று பசுவை அழைப்பது போன்று ஞானம் கருதி நான் ஆசான் நந்தீசரை அழைத்தேன். அதனால் தவிர வைத்தார். உன்னுடைய வினையை ஆராய்ந்து பார்த்து வினையை நீக்கக் கூடிய ஆற்றல் ஆசானுக்கு உண்டு. ஏனென்றால் ஆசான் தவிர வைக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றவர். வெளியே செல்வது தீவினை, உள்ளே வருவது நல்வினை. நல்வினை தீவினை வந்து போய் கொண்டே இருக்கும்.

ஒருவன் வாழ்நாள் முழுவதும் பிறருக்கு இடையூறு செய்வான். தன்னிடம் வேலை செய்கின்றவனை கொடுமைப்படுத்துவான். மனைவியிடம் அன்பு காட்ட மாட்டான். தாய்தந்தையரிடம் அன்பு காட்ட மாட்டான். வருகின்ற விருந்தினரை உபசரிக்க மாட்டான். சிறிதும் கருணையில்லாமல் வாழ்கின்றவனாக இருப்பான். இப்படியெல்லாம் வினை சூழ்ந்திருக்கும்.

நான் உனது ஆசியைப் பெற வேண்டும், கடவுள் தன்மையை அடைய வேண்டும், எனக்கு ஞானவாழ்வு வேண்டுமென்று ஆசானிடம் இவன் கேட்பான். ஆசான் இவனுடைய வரவு செலவை ஆராய்ந்து பார்த்து, இவனால் யாரெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ என்பதைப் பார்த்து அவர்களுக்கெல்லாம் அருள் செய்வார். நீ அறிந்தும் அறியாமலும் செய்த எல்லா வினைகளையும் ஆசான் நீக்கிவிடுவார்.

கருணையே வடிவான மிகப்பெரிய கோடீஸ்வரன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரே மகன். மகன் மீது அளவிலாத பற்று உள்ளவன். மகன் தவறு செய்கிறான் என்பதை அறிந்து மனம் வருந்தினான். மகனுக்கு எவ்வளவோ அறிவுரை சொன்னான். ஆனால் அவன் கேட்கவில்லை.

ஊருக்குள் கடன் வாங்கிக் கொண்டு திருப்பி தராமல் இருப்பது, கொடுத்த கடனை கேட்டால் அராஜகங்கள் செய்வது என்று தவறுக்கு மேல் தவறு செய்து கொண்டிருந்தான். ஊர் மக்கள் ஒன்று திரண்டு கோடீஸ்வரன் மகனை கொன்றுவிடுவது என்று முடிவு செய்து அவனை துரத்துகிறார்கள். ஓடி வந்து தனது தந்தையிடம் சரணடைந்து இனி என்னால் வெளியே செல்ல இயலாது என்னை காப்பாற்றுங்கள் என்றான். முன்னமே பலமுறை உனக்கு அறிவுரை சொன்னேன். நீ கேட்கவில்லை. ஆனால் காலம் நெருங்கிவிட்டது. இனி நான் என்ன செய்ய முடியும் என்றார்.

நீங்கள்தான் என்னை காப்பாற்ற வேண்டும். இல்லையென்றால் என்னை கொன்றுவிடுவார்கள் என்றான். நான் செய்தது தவறுதான் என்னை மன்னித்துவிடுங்கள். இனி நான் அப்படி செய்ய மாட்டேன் என்றான்.

அராஜகங்கள் அவ்வளவு செய்திருக்கிறாயே நான் என்ன செய்ய முடியும் என்று சொன்னார். இருந்தாலும் இப்பொழுதாவது உன்னுடைய தவறை நீ உணர்ந்திருக்கிறாய். தவறை உணர்ந்த பொழுதே நீ திருந்திவிட்டாய்.

எப்பொழுது ஒருவன் தனது குற்றத்தை அறிகின்றானோ அப்பொழுதே அவன் கடவுள் தன்மை அடைகின்றான் என்று அர்த்தம்.

இனி தவறு செய்ய மாட்டேன் என்று உறுதி கொடு என்று மகனிடம் கேட்டான். எந்த தவறும் இனி செய்ய மாட்டேன் என்று மகன் உறுதி கொடுத்தான்.

தன் மகனால் பாதிக்கப்பட்ட அனைவரையும் அழைத்து ஒவ்வொருவரிடமும் விசாரித்தான். கையிலுள்ள பணத்தைக் கொண்டு ஐயாயிரம் கொடுக்க வேண்டியவர்களுக்கு பத்தாயிரம், பத்தாயிரம் கொடுக்க வேண்டியவர்களுக்கு இருபதாயிரம் கொடுத்து எல்லோருடைய கடனையும் தீர்த்து வைத்தார்.

எல்லோருடைய கடனையும் தீர்த்து இனி இவன் தவறு செய்தால் நான் உத்தரவாதமல்ல என்று சொன்னார். தன் கையிலுள்ள மூலதனத்தைக் கொண்டு சாதாரணமான தந்தை தன் மகனை காப்பாற்றுகின்றார். தந்தைக்கே இவ்வளவு ஆற்றல் இருக்கிறது என்றால், உலகப்பெருந்தலைவனுக்கு எவ்வளவு ஆற்றல் இருக்க வேண்டும்.

ஞானிகள் சூட்சும தேகத்தையும், தூலதேகத்தையும் முடி போட்டவர், இன்பத்தையும் துன்பத்தையும் முடி போட்டவர், நரகத்தையும் சொர்க்கத்தையும் முடி போட்டவர், ஜீவாத்மாவையும், பரமாத்மாவையும் ஒன்று சேர்த்தவர், பலகோடி ஆண்டுகளை ஒரு நொடிப்பொழுதாக வாழக் கூடியவர், எதையும் சாதிக்கக் கூடியவர், ஒரு நொடிப்பொழுதிற்குள்ளே உலகமெல்லாம் சுற்றி வரக்கூடிய தகைமை பெற்றவர், அன்பர்கள் அழைக்கும்போது அஞ்சேல் மகனே என்று அருளக் கூடியவர். அவர்தான் தவிர வைக்க முடியும்.

**தவிரவைத் தான்வினை தன்னடி யார்கோள்** – ஞானிகள் மட்டுமே அடியார்கள் செய்த வினையை நீக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றவர்கள்.

**தான் என்ற கொடும்பாவம் தீர்க்கும் ஆசான்**
**தர்மத்தின் வழிசொல்லிக் கருணை வைப்பான்**
**ஊன் என்ற மந்திரமே உபதேசித்து**
**உண்மையுடன் சுழிமுனையிலே இருக்கும் என்று**

**கோன் என்ற சிவரூபம் கண்ணில் காட்டி**
**கோபமென்ற முனைபோக்கி ஆசை போக்கி**
**நான் என்ற ஆணவங்கள் தன்னைப்போக்கி**
**நாட்டுவார் குருநாதன் மோட்சந் தானே.**

**– மகான் கொங்கண மகரிஷி கடைக்காண்டம் – கவி எண் 491.**

உனக்கு மோட்சலாபத்தை தருபவரின் தகுதி என்னவென்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். மோட்சலாபம் தரக்கூடியவரைப் பார்த்து பூஜை செய்ய வேண்டும். நீ வணங்குகின்றவனின் தகுதியை ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

**வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனுங்**
**கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி**
**தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னுந்**
**தோயம தாய்எழுஞ் சூரிய னாமே.**

**– திருமந்திரம் – உபதேசம் – கவி எண் 116.**

நீ அன்பு செலுத்தக்கூடிய தலைவன், **வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனுங் கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி** என்பார் மகான் திருமூலர்.

**தவிரவைத் தான்சிரத் தோடுதன் பாதம்** – அன்பு செலுத்தினால் உடம்பிலே சார்ந்திருந்து இடகலையும் பிங்கலையும் சேர்த்து அவன் சிரத்தின் மீது இவருடைய கரத்தை வைப்பார். அவருடைய இரு கால் கொண்டு நம்முடைய இரு கால் ஆட்டுவார். நீ பூஜை செய்யும் பொழுது, பொதிகை மலையில் தலைவன் இருக்கிறார். அங்கிருந்து நம்முடைய மூச்சுக்காற்றை அசைத்து இடகலையும் பின்கலையும் ரேசித்து புருவமத்தியில் செலுத்திவிடுவார்.

சிரத்தோடு தன் பாதம் வைத்து கோள்களை தவிர வைத்தான் என்பார். கோள் என்பது நவகோள்கள். ஒன்பது கிரகங்களும் அவனுடைய வினைக்கேற்றார்போல் நன்மைகளையும் தீமைகளையும் செய்யும். நவகிரகங்கள் முரண்பட்டு இருக்கும். ஒருவனுக்கு நன்மை செய்யக் கூடிய கிரகம், இன்னொருவனுக்கு அதே கிரகம் தீமையை செய்யும்.

ஒருவன் செய்த பாவமே நவகிரகங்கள் மூலம் அந்தந்த காலத்திற்கு ஏற்றார்போல் நன்மைகளையும் தீமைகளையும் செய்கிறது.

ஆசான் திருமூலதேவரை வணங்கி என்னை காப்பாற்றுங்கள் என்று வேண்டிக் கொண்டால் ஆசான் அருள் செய்வார். ஆசான் திருமூலதேவர் முரண்பட்டு இருக்கக் கூடிய ஒன்பது கோள்களையும் கட்டுப்படுத்தி விடுவார். நவகிரகங்களும் ஞானிகளின் ஆட்சிக்குட்பட்டது.

**தன்னடியார் கோள் தவிர வைத்தான்** – ஒன்றோடு ஒன்று முரண்பட்டு இருக்கக் கூடிய கோள்களையும் செயலிழக்கச் செய்துவிட்டார். இது ஆசான் தயவால்தான் நடக்க வேண்டும். சின்ன விஷயமல்ல. அவர்கள் திருவடிகளை சிரம் மீது வைத்தார், ஆகவே கோள்களை தவிர வைத்தான் என்பார். அவர்களுடைய இரு கால் (கால் – காற்று) கொண்டு புருவமத்தியில் செலுத்தி விடுவார்.

அவர்களுடைய திருவடியை நமது சிரம் மீது வைத்து ஒன்றோடு ஒன்று முரண்பட்ட கோள்களையெல்லாம் செயலிழக்கச் செய்வார்.

**தவிரவைத் தான்நமன் தூதுவர் கூட்டம்** – எமன் ஒருவன்தான், பிடிக்கின்ற உயிரும் ஒன்றுதான். ஆனால் நமன் தூதுவர் கூட்டம் என்று சொன்னார்.

நமக்கு எமன் யாரும் அல்ல. பொறாமையே நமக்கு எமன். நம்மிடமுள்ள அனைத்து குணக்கேடுகளும் எமனே. தத்துவங்கள் அனைத்தும் நமக்கு விரோதங்களே செய்யும், நமக்கு உடன்பாடாக இருக்காது.

இவன் முன்னேற முயற்சிப்பான். மெய், வாய், கண், மூக்கு, செவி போன்ற பொறிபுலன்கள் மற்றும் கருவிகரணங்கள் போன்றவை இவனுக்கு தடையாக இருக்கும், உடன்பாடாக இருக்காது. இதையெல்லாம் தவிர செய்வார். நம்மை விட்டு நீங்கச் செய்வார் அல்லது உடன்பட செய்வார். மும்மலமே நமக்கு எமன்தான். சுருக்கமாகச் சொன்னால் பசியே நமக்கு எமன். பசிக்கு உணவு தந்தால் காமம் வரும்.

பசி நம்மை காத்து ரட்சிக்கக் கூடிய தாய். பசிக்கு உணவு தந்தால் அவள் மென்மையானவளாக, நயமானவளாக இருப்பாள். உணவு தராவிட்டால் அவள் காளியாக மாறி நம்மை அழித்துவிடுவாள். உணவு தந்தால் அவள் புன்னகைத்து அன்பு காட்டுவாள். பசி என்று சொல்லப்பட்ட தாய் நம்மை நேசிப்பாள். அவளுக்கு பக்குவமாக உணவு கொடுத்தால் நம்மை ஏற்றுக் கொண்டு அன்பு காட்டுவாள்.

குணக்கேடுகளெல்லாம் நமன் தூதுவர் கூட்டம். ஒத்தக் கருத்தில்லாத நண்பர்களும் எமனே. ஒத்தக் கருத்தில்லாத மனைவியும் எமனே. சொன்ன பேச்சை கேட்காத பிள்ளைகள் எமனே. முரண்பட்ட தாய்தந்தையர் எமனே. முரண்பட்ட உடன்பிறந்தவர் எமனே. முரண்பட்ட நண்பர்கள் எமனே. இத்தனை பேரும் உடன்பட வேண்டும்.

**தவிரவைத் தான்நமன் தூதுவர் கூட்டம்** – நமக்கு விரோதமானதை எல்லாம் தவிர வைத்தார். ஆசான் நந்தீசர் பாதத்தைப் பற்றும்போது தவிர வைப்பார். மகான் திருமூலதேவர் பாதத்தைப் பற்றினால் உண்மைப்

பொருளுணர்ந்த ஆசானை சுட்டிக் காட்டுவார்கள். முரண்படுகின்ற அத்தனை தத்துவங்களும் நமக்கு உடன்பாடாகும், முரண்படுகின்ற அத்தனை தீயசக்திகளும் நம்மைவிட்டு நீங்கும்.

உயரதிகாரியே எமனாக இருப்பான். அவனை அனுசரித்து செல்லாவிட்டால் அவனே நமக்கு எமனாக மாறுவான். கொன்றுவிட மாட்டான், கொல்லாமலே கொல்லுவான்.

ஒருவன் தன் மனைவியிடம் மிகுதியாக அன்பு காட்டுவான், ஆனால் மனைவியோ அவனிடம் அன்பு காட்ட மாட்டாள். அணுஅணுவாக சித்திரவதை செய்வாள். அவளும் எமனே. எப்பொழுது பார்த்தாலும் நான் அன்பு காட்டுகின்றேன். ஆனால் என்னுடைய மனைவி உதாசீனப்படுத்துகிறாள். இதற்கு வழியே இல்லையா என்று ஆசான் திருமூலதேவரிடம் வேண்டினால், அவள் வசப்படுவாள்.

என்னுடைய மகன் என்னுடைய கௌரவத்தை காப்பாற்றாமல் குடிப்பழக்கத்திற்கு ஆட்பட்டு பல தீய பழக்கவழக்கங்களுக்கு ஆட்படுகின்றானே எனக்கு கட்டுப்படவில்லையே என்று ஆசான் திருமூலதேவரிடம் கேட்டால், ஆசான் அவனை திருத்துவார். நான் மனம் விட்டு பழகுகின்றேன், என்னையே நான் அர்ப்பணிக்கின்றேன், ஆனால் என்னுடைய நண்பர்கள் அத்தனைபேரும் என்னை வஞ்சிக்கின்றானே நான் என்ன செய்வேன்? என்று ஆசான் திருமூலதேவரிடம் கேட்டால், அவன் உடன்படுவான். நாம் வணங்குகின்ற ஆசானின் தயவைப் பெற்றால் முரண்டுபடுகின்ற அத்தனை பேரும் நமக்கு உடன்படுவார்கள்.

உடம்பைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்வதற்காகத்தான் நாங்கள் உங்களிடம் இதுநேரம் வரை பேசிக் கொண்டிருக்கிறோம். இந்தத் துறையில் தேகம்தான் முக்கியம், உடம்பை விட்டுவிடாதீர்கள். உடம்பைப் பற்றி அறிந்தால்தான் உடம்பை பாதுகாக்கக் கூடிய அறிவு வரும். பரமாத்மாவோடு ஜீவாத்மா கலக்கும்வரை, ஜீவாத்மா தங்கியிருக்கும் இந்த தேகத்தை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். புருவமத்தியில் ஆன்மா தங்கினால் நிச்சயமாக இந்த உடம்பு பாதுகாக்கப்படும். கன்று பசியோடு அழைக்கும்போது, கன்றை தேடி பசு வருவது போல், எனது ஆசான் நந்தீசரை நான் ஞானம் கருதி அழைத்தேன் என்கிறார் மகான் திருமூலதேவர். ஆசான் திருமூலதேவரை வணங்கினால் முரண்பட்டு இருக்கக்கூடிய கிரகங்கள் நமக்கு நன்மையை செய்யும். நமது குணக்கேடுகளே நம்மைப் பிடிக்கும் எமதூதுவர் கூட்டம். ஆசான் திருமூலதேவரை வணங்கினால் முரண்பட்ட மனைவி, பிள்ளைகள், நண்பர்கள், தாய்தந்தையர்கள் இவர்களெல்லாம் உடன்படுவார்கள். ஆகவே

ஆசான் அகத்தீசரை நீங்கள் தினமும் பூஜை செய்து, நாங்கள் சொன்ன கருத்துகளை பின்பற்றி நீங்களெல்லாம் முன்னேற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன் வணக்கம்.

–சுபம்–

1. **பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட**
**நற்றறமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவான்.**

2. **காலனை வெல்ல கடுந்தவம் வேண்டுமோ**
**வேலன் திருவடியே காலனை வெல்லும்.**

3. **சேவற் கொடியுடைய செவ்வேள் முருகன்**
**சாகாக்கல்வியை தந்தருள் புரிவான்.**

4. **சேவற் கொடியுடைய செந்தில்வேலவன்**
**காவல் கொண்டே காப்பான் நம்மை.**

5. **ஒன்றே மூவாசை முற்றிலும் வெல்வதற்கே**
**நன்றே அருளினான் ஞானபண்டிதன்.**

6. **தாழ்வகலும் தர்மம் தழைத்தோங்கும்**
**நமக்கு வாழ்வளிக்கும் அகத்தியர் திருவடியே.**

7. **மணிவாசக பெருமானின் மலரடி போற்றிட**
**அணிமா சித்தும் அருள்வார் நமக்கே.**

8. **கன்னல் ரசமென கனிந்தருளும் அகத்தீசர் நமது**
**இன்னல் தீர்ப்பார் இனிதே.**

9. **அழிக்க வியலா நச்சுக்கிருமியை**
**அழிக்க அருள்வான் ஆறுமுகவேலன்.**

10. **சைவத் தலைவன் வேலவனைப் போற்றிட**
**வையகம் போற்ற வாழ்வு அருள்வான்.**

11. **மறை போற்றும் வேலவன் மலரடி போற்றிட மாயை**
**திரை நீக்கி அருள்வான் இன்பமே.**

12. **புண்ணியவான் சம்பந்தன் பொன்னடி போற்றிட**
**பண்ணிய பாவமெல்லாம் பறந்தே போமே.**

13. **மறைஞான சம்பந்தன் மலரடி போற்றிட**
**நிறைவான வாழ்வு பேரின்பமும் நல்குமே.**

14. **வித்தக வேலனை வேண்டி அழைத்திட**
**சத்து சித்து கைவசமாமே.**

15. சைவத் தலைவன் சண்முகனைப் போற்றிட
வையகம் போற்ற வாழ்வு அருள்வான்.

16. ஐயன்வேலவன் அடியினைப் போற்றிட
வையகம் போற்ற வாழ்வார் நலமே.

17. ஆட்சிதான் மாற்றமும் அருளுவான்
வேலனும் மாட்சிமைமிக்க மக்கள் வாழவே.

– சற்குருநாதர் ஆறுமுக அரங்கமகா தேசிகர்.

# முருகன் திருவடி வாழ்க

**ஓம் சரவணஜோதியே நமோ நம**

உயிர்க்கொலை தவிர்த்து புலால் மறுத்து காலை மாலை பத்து நிமிடம் இந்த மகாமந்திரத்தை சொன்னால் வாழ்க்கையில் பல முன்னேற்றங்கள் உண்டாகும், ஞானமும் சித்திக்கும்.

## துறையூர் ஓங்காரக்குடிலிற்கு செல்ல வழித்தடம்

1. மதுரை (200கிமீ), திருச்சி, மார்க்கம் (45கிமீ) – திருச்சி மத்தியப்பேருந்து நிலையம் – சத்திரம் பேருந்து நிலையம் – டோல்கேட் – மண்ணச்சநல்லூர் – புலிவலம் – துறையூர். (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்)

2. சென்னை மார்க்கம் (330கிமீ) – சென்னை கோயம்பேடு – விழுப்புரம் – பெரம்பலூர் – துறையூர். (பஸ்டாண்டு).

3. கரூர் மார்க்கம் (70கிமீ) – கரூர் பஸ்டாண்டு – குளித்தலை – முசிறி – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).

4. சேலம் மார்க்கம் (110கிமீ) – சேலம் பஸ்டாண்டு – வாழப்பாடி – மல்லியக்கரை – தம்மம்பட்டி – துறையூர் (பஸ்டாண்டு).

5. ஈரோடு மார்க்கம் (110கிமீ) – திருச்செங்கோடு – நாமக்கல் – தா.பேட்டை – துறையூர் (அன்னை மருத்துவமனை பஸ் நிறுத்தம்).

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## புரட்டாசி பௌர்ணமி விழா

நாள் : **சார்வரி ஆண்டு, புரட்டாசி மாதம் 15ஆம் தேதி,**
**01.10.2020 - வியாழக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை

ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :

**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

முருகப்பெருமான் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில்

## ஐப்பசி பௌர்ணமி விழா

நாள் : **சார்வரி ஆண்டு, ஐப்பசி மாதம் 15ஆம் தேதி,**
**31.10.2020 - சனிக்கிழமை காலை 10 மணி அளவில்**

இடம் : **ஓங்காரக்குடில், துறையூர்.**

**அனைவரும் வருக!** நிகழ்ச்சி நிரல் **குருவருள் பெறுக!!**

காலை 6.00 மணி – **சரவண ஜோதி தரிசனம்** மற்றும் **வழிபாடு**
காலை 6.30 மணி – **அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம்**
காலை 9.00 மணி – **தவத்திரு குருநாதர் அவர்கள் தீட்சை வழங்குதல்**
காலை 9.30 மணி – **சித்தர்கள் வழிபாடு**
பகல் 12 மணி – **தவத்திரு குருநாதர் அவர்களின் சிறப்பு அருளுரை**

காலை 8 மணி முதல் மதியம் 3 மணி வரை

ஞானிகளை பூஜித்த அருட்பிரசாதம் (அன்னதானம்) வழங்கப்படும்.

நிகழ்ச்சிகளின் உபயதாரர் :

**D.ராம்குமார், D.P.சுதாகர்,** கோவை. **D.ரெங்கநாதன்,** சென்னை.

அகத்தியர் துணை



மகான் அகத்தியர்



குருநாதர்



ஓங்காரக்குடிலாசான், முருகப்பெருமானின் கல்கி அவதாரம், தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அவர்களுடைய சொற்பொழிவுகளை ஒலி, ஒளி (Audio Video) வடிவமாக கேட்கவும் பார்க்கவும் மற்றும் பதிவிறக்கம் (Download) செய்யவும்,

# www.agathiar.org

என்ற இணைய தளத்திற்கு செல்லவும். மேலும் நித்ய சுவடிகள் பதிவிறக்கம் செய்து படித்துக் கொள்ளலாம்.

குருவருள்வேண்டி . . .

மரு. இரா.விஜயகுமார் – இரா.மாதவன்

**அன்னை மருத்துவமனை,**

**துறையூர்.**

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்** அருளுகின்ற மாத இதழ்

# ஞானத்திருவடி

கடவுளால் இயற்றப்பட்ட நூல். உலக மக்கள் துன்பமில்லாமல் வாழவும், ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளவும், ஞானிகள் வழிமுறைகளை தொகுத்து கொடுத்துள்ளார்கள். எனவே இந்த நூலை படித்து மற்றவர்களுக்கு வாங்கி கொடுப்பது மிகப்பெரிய புண்ணியம் ஆகும். ஞானத்திருவடி நூலிற்கு சந்தா செலுத்துதல், சந்தாவை புதுப்பித்தல் மற்றும் ஞானத்திருவடி நூலை வாங்கி கொடுப்பதற்கும் உங்கள் அருகாமையில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| 1. | சரவணன், மண்ணச்சநல்லூர், திருச்சி | 84289 05393 |
| 2. | கோவை – | |
| | பிரபு, ஒண்டிபுதூர் | 90035 67548 |
| | கிருஷ்ணமூர்த்தி, இடையர்வீதி | 98947 49339 |
| | தெய்வசேனா, வடவள்ளி | 77088 93843 |
| | ஸ்ரீதர், காட்டூர் | 94872 24035 |
| | கோவிந்தராஜ், துரை டிரைவிங், ஸ்கூல், சூலூர் | 98651 94194 |
| 3. | சென்னை – | |
| | ரெங்கநாதன், வடபழனி | 96770 17170 |
| | ஜெயராஜ், அம்பத்தூர் | 94441 75629 |
| | முருகவேல், அம்பத்தூர் | 95660 54957 |
| | ராமச்சந்திரன், மேடவாக்கம் | 87544 40544 |
| | ரகுபதி, திருவொற்றியூர் | 99622 32314 |
| | சௌந்தரராஜன், மீஞ்சூர் | 98406 24169 |
| 4. | மோகன் கென்னடி, விருதுநகர், மதுரை | 98421 01357 |
| 5. | பிரசன்னக்குமார், மணப்பாறை | 74022 72216 |
| 6. | பழனிச்சாமி, கரூர் | 90955 16455 |
| 7. | பாஸ்கர், தூத்துக்குடி | 98650 84856 |
| 8. | சசிக்குமார், மார்த்தாண்டம், நாகர்கோவில் | 94893 93303 |
| 9. | சரவணன், திருநெல்வேலி | 93677 55008 |
| 10. | கோபிநாத், சேலம் | 78713 99100 |
| 11. | பாண்டுரங்கன், திருவண்ணாமலை | 95004 74192 |
| 12. | பாபு, தஞ்சாவூர் | 97891 66458 |
| 13. | சிவசங்கரன், ராமநாதபுரம் | 98426 23117 |
| 14. | யூவி, நாமக்கல் | 99651 29647 |
| 15. | பிரேம், ஈரோடு | 76674 37673 |
| 16. | செல்லத்துரை, சித்தோடு | 90957 45489 |
| 17. | ராஜேந்திரன், வேதாரண்யம் | 94885 32616 |
| 18. | மலர்க்கொடி, வேலூர் | 99521 15654 |

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்
தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

## ஓங்காரக்குடில் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (தமிழ்) | ரூ. 5 |
| 2. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (ஆங்கிலம்) | ரூ. 20 |
| 3. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (சமஸ்கிருதம்) | ரூ. 20 |
| 4. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மலையாளம்) | ரூ. 15 |
| 5. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (கன்னடம்) | ரூ. 20 |
| 6. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (குஜராத்தி) | ரூ. 20 |
| 7. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (மராட்டி) | ரூ. 20 |
| 8. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பெங்காளி) | ரூ. 20 |
| 9. | சித்தர்கள் போற்றித் தொகுப்பு (பஞ்சாபி) | ரூ. 20 |
| 10. | ஞானிகள் அருளிய தினசரி பாராயண நூல் | ரூ. 75 |
| 11. | அனுபவ விளக்கப் பத்திரிக்கைகள் | ரூ. 45 |
| 12. | மனுமுறைகண்ட வாசகம் | ரூ. 50 |
| 13. | மனுமுறைகண்ட வாசகம் (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 14. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை | ரூ. 40 |
| 15. | திருமந்திர உபதேசம் விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 40 |
| 16. | சுகமான வாசியே அகத்தீசராகும் | ரூ. 25 |
| 17. | திருக்குறள் ஞானஅமுது – குருநாதர் அருளுரை | ரூ. 60 |
| 18. | தன்னை அறியும் அறிவே தகைமையாகும் | ரூ. 15 |
| 19. | ஜீவகாருண்ய ஒழுக்கம் | ரூ. 20 |
| 20. | ஜீவகாருண்ய ஒழுக்கம் (ஆங்கிலம்) | ரூ. 30 |
| 21. | தமிழைக் கற்றால் வரும் நன்மைகள் | ரூ. 40 |
| 22. | ஞானத்திருவடி ஆண்டு மலர் தொகுப்பு | ரூ. 150 |
| 23. | சிவஞானபோதம் – குருநாதர் அருளுரை | ரூ. 30 |
| 24. | ஆத்திசூடி – விளக்கவுரை | ரூ. 50 |
| 25. | ஆத்திசூடி – விளக்கவுரை (ஆங்கிலம்) | ரூ. 100 |
| 26. | சித்தர்களின் பாடல்களுக்கு அரங்கரின் அருளுரைகள் | ரூ. 70 |
| 27. | நித்திய ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 28. | 131 சித்தர்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |

| | | |
|---|---|---|
| 29. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய சயன சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 150 |
| 30. | 131 சித்தர்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் தொகுப்பு | ரூ. 200 |
| 31. | 63 நாயன்மார்கள் 12 ஆழ்வார்கள் அருளிய தியான சூட்சும ஆசி நூல் | ரூ. 180 |
| 32. | குருநாதர் அவர்களின் ஆன்மீகச் சொற்பொழிவு ஆடியோ, வீடியோ டிவிடி<br>புனித ஞான அகத்தீசனின் பொதிகை கீதம் – ஆடியோ சிடி<br>ஞானிகள் அருளிய ஞானிகள் போற்றி, அரங்கர் சரணம், அரங்கர் போற்றி, அரங்கர் புகழ்மாலை ஆடியோ சிடி<br>சித்தர் போற்றித் தொகுப்பு<br>அகத்தீசன் தத்துவ புகழுரை<br>ஆசான் பாடல்கள் ஆடியோ சிடி.<br>சித்தர் பாடல்கள், கொடி வணக்கம்,<br>மகான் கருவூரார் புகழ் வெண்பா, மகான் கஞ்சமலைச் சித்தர் புகழ் வெண்பா ஞானக்குறள் | ரூ. 10 |
| 33. | ஓங்காரக்குடிலின் ஆவணப்படம் | ரூ. 25 |
| 34. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 1) | ரூ. 130 |
| 35. | ஞானசூட்சும ஆசி நூல் (தொகுப்பு – 2) | ரூ. 200 |
| 36. | ஞானிகள் திருஉருவப்படங்கள் | |

# அருளுரை

| | | |
|---|---|---|
| 1. | கீர்த்தித் திருஅகவல் | ரூ.15 |
| 2. | ஞானிகள் பற்றிய அனுபவ விளக்கம் | ரூ.15 |
| 3. | மகான் இராமதேவர் அருளிய யோகப்பயிற்சி பாகம்–2 | ரூ.15 |
| 4. | இருமை அறிந்தவர் பெருமை | ரூ.15 |
| 5. | ஞானத்திற்கு தடை சந்தேகமே | ரூ.15 |
| 6. | மோன நிலையே ஞானநிலை | ரூ.15 |
| 7. | அருணகிரிநாதர் புகழ்மாலை | ரூ.15 |
| 8. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 1) | ரூ.15 |
| 9. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 2) | ரூ.15 |
| 10. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 3) | ரூ.15 |
| 11. | முக்திக்கு தலைவன் முருகனே (பாகம் – 4) | ரூ.15 |
| 12. | பணிவே செம்மையான வாழ்வு | ரூ.15 |
| 13. | நோயில்லா வாழ்வு வாழ வேண்டுமா | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 14. | ஒன்றே குலம் ஒருவனே தேவன் | ரூ.15 |
| 15. | சோம்பல் ஆகாது – பாகம் 1 | ரூ.15 |
| 16. | நட்பே நன்மை தரும் | ரூ.15 |
| 17. | நன்றி மறவாதே | ரூ.15 |
| 18. | உயிருக்கு மருத்துவம் | ரூ.15 |
| 19. | விருந்தே வேள்வியாகும் | ரூ.15 |
| 20. | பூதாதி இலயம் | ரூ.15 |
| 21. | பட்டினத்தாரின் யோகமும் ஞானமும் | ரூ.15 |
| 22. | குருபக்தியே குணப்பண்பு தரும் | ரூ.15 |
| 23. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –1) | ரூ.15 |
| 24. | முருகன் ஆசி பெற உபாயம் (பகுதி –2) | ரூ.15 |
| 25. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 1) | ரூ.15 |
| 26. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 2) | ரூ.15 |
| 27. | வள்ளுவன் கடவுள் (பாகம் – 3) | ரூ.15 |
| 28. | ஞானிகள் பூஜையே தவமாகும் | ரூ.15 |
| 29. | குருவருளே தவமாகும் | ரூ.15 |
| 30. | முருகன் ஆசிபெற உபாயம் – 3 | ரூ.15 |
| 31. | முருகன் ஆசிபெற உபாயம் – 4 | ரூ.15 |
| 32. | பூஜை | ரூ.15 |
| 33. | தவம் | ரூ.15 |
| 34. | அருட்பெருஞ்ஜோதியை அடையும் முறை | ரூ.15 |
| 35. | விதியை வெல்லும் பக்தி | ரூ.15 |
| 36. | தினசரி பாராயண நூல் | ரூ.15 |
| 37. | எமபயம் நீங்க ஓர் உபாயம் | ரூ.15 |
| 38. | குடமுழுக்கு விழா | ரூ.15 |
| 39. | பௌர்ணமி நோன்பு | ரூ.15 |
| 40. | புறபூஜையும் அகபூஜையும் | ரூ.15 |
| 41. | பூஜை முறையும் வாழ்க்கையும் | ரூ.15 |
| 42. | சுப்பிரமணியர் கடவுளானது எப்படி | ரூ.15 |
| 43. | தலைவன் திருவடியே துணை | ரூ.15 |

| | | |
|---|---|---|
| 44. | தயவே சித்தி தரும் | ரூ.15 |
| 45. | திருமந்திர உபதேசம் | ரூ.15 |
| 46. | ஆன்மீக அரசியல் | ரூ.15 |
| 47. | தானமும் தவமும் | ரூ.15 |
| 48. | குருசீடர் நெறிமுறை | ரூ.15 |
| 49. | இல்லறத்தார்க்கு ஓர் உபதேசம் | ரூ.15 |
| 50. | சைவமே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் | ரூ.15 |
| 51. | வாசி வசப்படல் | ரூ.15 |
| 52. | உண்மை ஆன்மீகம் என்றால் என்ன? | ரூ.15 |
| 53. | எது ஆன்மீகம் | ரூ.15 |
| 54. | விநாயகர் அகவல் | ரூ.15 |
| 55. | பிரபஞ்ச இயக்கம் | ரூ.15 |
| 56. | இருள்சேர் இருவினையும் சேரா இறைவனே வள்ளுவப்பெருமான் | ரூ.15 |
| 57. | தன்னை அறியும் முறை | ரூ.15 |
| 58. | நமசிவாயம் | ரூ.15 |
| 59. | மோட்சகதி | ரூ.15 |
| 60. | திருக்குறளில் குற்றங்கடிதல் | ரூ.15 |
| 61. | பூரணம் எனும் யோகரகசியம் | ரூ.15 |
| 62. | சிவஞானபோதம் 12வது சூத்திர விளக்கம் | ரூ.15 |
| 63. | பஞ்சபூத விளக்கம் | ரூ.15 |
| 64. | சித்த தத்துவமும் பொருளாதாரமும் | ரூ.15 |
| 65. | ஆலய வழிபாடு | ரூ.15 |
| 66. | சமூக சான்றோரும் ஆன்மீக சான்றோரும் | ரூ.15 |
| 67. | சன்மார்க்கத்தில் சித்தாந்தம் | ரூ.15 |
| 68. | சொர்க்க வாசல் | ரூ.15 |
| 69. | சும்மா இரு என்னும் இரகசியம் | ரூ.15 |
| 70. | காயமே இது பொய்யடா | ரூ.15 |


**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

**ஓங்காரக்குடில், துறையூர்.**

செல் : 90956 33344

ஓங்காரக்குடில் வெளியீடுகளைப் பெற

**மகான் பதஞ்சலியார் புத்தக நிலையம்**

ஓங்காரக்குடில், துறையூர் - 621010, திருச்சி மாவட்டம்.

செல் - 90956 33344 kudilbooks@gmail.com

எங்களது வெளியீடுகளைப் பெற...

தங்களின் முழு முகவரி மற்றும் தங்களின் செல் போன் எண் தெளிவாக எழுதி புத்தகத்திற்கு உண்டான தொகையை கீழ்க்கண்ட முறைகளில் அனுப்பலாம். (கூரியர் செலவிற்கும் சேர்த்து அனுப்பவும்)

Cheque - காசோலை, DD - வரைவோலை, MO - பணவிடை

**GOOGLE PAY**

Mobile No - 90956 33344.
UPI CODE - kudilbooks@okhdfcbank

Cheque, DD எடுக்க வேண்டிய பெயர் -

**MAHAN PATHANJALIYAR BOOK STALL,**
**Payable at "Thuraiyur" or "Tiruchirapalli"**

ஓங்காரக்குடில் வெளியீடுகளை பெற கீழ்க்கண்ட முறையில் பணம் அனுப்பலாம்.

Amount Transfer செய்ய வேண்டிய விபரம் -

| | | |
|---|---|---|
| **NAME** | : | **MAHAN PATHANJALIYAR BOOK STALL** |
| **BANK NAME** | : | **Karur Vysya Bank (KVB)** |
| **ACCOUNT NO** | : | **1646135000003720** |
| **IFSC CODE** | : | **KVBL0001646** |
| **BRANCH** | : | **THURAIYUR** |

பணம் அனுப்பியவுடன் 90956 33344 என்ற செல் எண்ணிற்கு தகவல் தெரிவக்கவும்.

**இணையம் மூலமாக ஞானத்திருவடி சந்தா செலுத்தவும் மற்றும் புதுப்பிக்கவும் புதிய வசதி**

www.agathiar.in என்ற இணையத்தில் சென்று தங்களுடைய பெயர் மற்றும் முகவரி, அலைபேசி எண் பதிவு செய்து, New User Name and Password கொடுத்து Register செய்து சந்தா செலுத்தினால் மாதந்தோறும் ஞானத்திருவடி மாத இதழ் தங்களது இல்லத்திற்கு தபால்நிலையம் மூலம் அனுப்பப்படும்.

**Payment Options : Net Bank, Debit (or) Credit Card, Paytm**

தொடர்புக்கு :

செல் : **96882 78666, trustkudil@gmail.com**

முருகப்பெருமான் துணை

# நன்கொடை வழங்க...

## அன்னதானம் செய்தால் துன்பங்கள் விலகும்.

கடந்த 43 ஆண்டுகளாக 15 கோடி மக்களுக்கு மேலாக அன்னதானம் செய்து தன் அறப்பணியினை சிறப்புற தொடர்ந்து வருகிறது நமது ஓங்காரக்குடில். இந்த அறப்பணிகளில் நீங்களும் பங்கேற்க வேண்டுமா.

பிரச்சனைகள் தீரவும், தங்களின் பிறந்தநாள், திருமணநாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் அல்லது வியாபாரம் தொடங்கிய நாள் மற்றும் பண்டிகை நாட்களிலும் அன்னதானம் செய்ய விரும்புவோர் DD, Cheque, M.O. மூலம் தங்களின் அருட்கொடையினை வழங்கலாம்.

தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின் படி வருமானவரி விலக்கு உண்டு.

**DD, Cheque, M.O. எடுக்க வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
Payable at Thuraiyur or Trichy.

**Account Details :**

| | | |
|---|---|---|
| A/C Name | : | SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST |
| A/C NO | : | 911010045586268 |
| Bank | : | Axis Bank |
| Branch | : | Thuraiyur.621010 |
| IFS Code | : | UTIB0001272 |

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**SRI AGATHIAR SANMAARGA CHARITABLE TRUST,**
113, Extension, Thuraiyur - 621010, Trichy (Dt),
Tamilnadu, India. Ph - 04327 255184. www.agathiar.in

**www.agathiar.in**

என்ற இணைய தளத்தில் உங்கள் பெயரையும், கடவுச்சொல்லையும் பதிந்தபிறகு நன்கொடை செலுத்தி தாங்களும் அன்னதானத்தில் பங்கேற்று புண்ணியத்தை பெறலாம்.

தாங்கள் அனுப்பிய தொகைக்கான இரசீது தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

இரசீது கிடைக்கப்பெறாதவர்கள் தொடர்புக்கு :
96882 78666, trustkudil@gmail.com

"சிவாய ஆறுமுக அரங்கமகா தேசிகாய நம"

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. —குறள் 226.


# சுந்தரானந்தர் எலக்ட்ரிகல்ஸ்

54–தெற்கு சிவன் கோயில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

✆ 044–24720499, 23721160.

## "அன்னதானம் செய்தால் துன்பங்கள் தீரும்"

குருவருள் வேண்டி . . .

# கணேஷ் ஹார்டுவேர்ஸ் & அலுமினியம்,

19/30, பிள்ளையார் கோவில் தெரு, வடபழனி,

சென்னை – 600 026.

Cell : 98400 – 20828.

✆ 044 – 23651284, 23652568.

## அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்ஜோதி அகவல்

விண்ணியல் தலைவரும் வியந்திட எனக்குப்
புண்ணியப் பயனால் பூத்த செம்பொன்னே
நால்வகை நெறியினும் நாட்டுக எனவே
பால்வகை முழுதும் பணித்த பைம்பொன்னே
எழுவகை நெறியினும் இயற்றுக எனவே
முழுவகை காட்டி முயங்கிய பொன்னே

எண்ணியபடி எலாம் இயற்றுக என்றெனைப்
புண்ணிய பலத்தாற் பொருந்திய நிதியே
ஊழிதோ றூழி உலப்புறாது ஓங்கி
வாழி என்று எனக்கு வாய்த்த நன்னிதியே 1370

## ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

குருவருள் வேண்டி . . .

**ANU BUILDERS (INDIA) Pvt. Ltd.**

**Builders & Estates**

Plot No.37, 2nd Main Road,
V.G.P. Babu Nagar, Medavakkam,
Chennai - 600 100.
Phone: 2277 0495,
E-mail : anubuilders@yahoo.com
Website : www.anubuilders.in

# கவனகர் முழக்கம்

மாத இதழ் – ரூ. 25/–

கவனகரின்

- ஆழமான ஆன்மீக விளக்கங்கள்
- அறிவுபூர்வமான சிந்தனையைத் தூண்டும் கருத்து மலர்கள்.
- விந்தையான பதில்கள் மற்றும் அனைத்துச் சிறப்பம்சங்களும் நிறைந்த மாத இதழ்.

**தமிழர்களின் வாழ்க்கைப் பாதையை வெற்றிப்பாதையாக மாற்ற வழிகாட்டும் இதழ் இப்பொழுது புதிய வடிவமைப்புடன் வெளிவருகிறது**

## கவனகர் முழக்கம்

**ஆசிரியர் :-**

உலகத் தமிழர்களில் ஓர் அதிசய மனிதர், பல்கலை வித்தகர், பதினாறு கவனகர், நினைவு கலைச்செம்மல், மனிதகணிணி

**திருக்குறள்**

## இராம.கனகசுப்புரத்தினம்

மேலும் விபரங்களுக்கு . . .

1/8, மனோஜ் நகர், சாந்தி கியர்ஸ் பவுண்டரி சாலை, கண்ணம்பாளையம், சூலூர், கோவை–641 402. செல் : 94440 55166

மற்றும்

**A.செந்தில்குமார்**

4/248, Maxworth Nagar, சுண்ணாம்பு கௌத்தூர், கோவிலம்பாக்கம், சென்னை–117. ✆ 98414 64388.

மெகா டிவியில் தினமும் காலை 7.30 மணிக்கு கவனகர் அய்யா அவர்களின் வெற்றி நிச்சயம் நிகழ்ச்சி பார்த்து பயன்பெறுங்கள்

அகத்தியர் துணை

முருகப்பெருமானின் கல்கி அவதாரம்,

தவத்திரு **ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

அவர்கள் தலைமையில்

# ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளையின்

## நித்திய செயல்பாடுகள்

| | |
|---|---|
| காலை 6.00 | முருகப்பெருமானின் சரவண ஜோதி வழிபாடு<br>ஞானியர் அருளிய நூல்கள் பாராயணம்<br>தியானம் (நாமஜெபம்) |
| காலை 7.30 | பெருமாள்மலை அடிவாரத்தில் அன்னதானம். |
| காலை 8.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| மதியம் 1.00 | ஓங்காரக்குடிலில் அன்னதானம் |
| **மதியம் 3.00** | முருகப்பெருமானின் கல்கி அவதாரம்<br>**ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள் தரிசனம்** |
| மாலை 5.00 | கிராம அன்னதானம் |
| மாலை 6.00 | அருட்ஜோதி வழிபாடு – தியானம் (நாமஜெபம்)<br>ஆசான் அகத்தீசர் வழிபாடு |

குறிப்பு: பிரதி வியாழக்கிழமை தோறும் காலை 9.30 மணியளவில் ஞானியர்கள் சிறப்பு பூஜையும், குருநாதர் அவர்களின் தரிசனமும் நடைபெறும்.


ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளைக்காக வெளியிடுபவர்

S.செந்தில்குமார், நிர்வாக அறங்காவலர்,

113–நகர் விரிவாக்கம், துறையூர்–621 010, திருச்சி மாவட்டம்.

ஆசிரியர் – இரா.மாதவன்.

அச்சிட்டோர் :

இராம.தொல்காப்பியன்,

வாஞ்சி மறுதோன்றி அச்சகம், கூட்டுறவு நகர், துறையூர்.

# ஞானத்திருவடி - மாத இதழ்

## சந்தாப் படிவம்

☐ 1 வருடச் சந்தா ரூ.120/– ☐ 3 வருடச் சந்தா ரூ.350/–

திரு/திருமதி. : ______________________________

முகவரி : ______________________________

______________________________

ஊர் : ______________ பின்கோடு ______________

வட்டம் : ______________ மாவட்டம் ______________

தொலைபேசி : ______________ (கைபேசி) ______________

சந்தா செலுத்தும் முறை

☐ CHEQUE காசோலை ☐ DD வரைவோலை ☐ MO–பணவிடை

☆ வரைவோலையை Sri Agathiar Sanmaarga Charitable Trust என்ற பெயரில் எடுக்கவும்.

☆ வரைவோலையை payable at Trichy (or) Thuraiyur என்று எடுக்கவும்.

☆ சந்தா அனுப்பும்போது கவரில் பணம் வைத்து அனுப்ப வேண்டாம். பணம் தவறினால் நிர்வாகம் பொறுப்பன்று.

☆ எங்களுக்கு தாங்கள் அனுப்பிய சந்தா கிடைத்த மாதத்திற்கு அடுத்த மாதம் 1–ம் தேதி முதல் மாதஇதழ் தங்களுக்கு அனுப்பப்படும்.

☆ தங்களின் தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.

நாள் :

செலுத்துபவர் கையொப்பம்

படிவத்தை பூர்த்தி செய்து கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

**ஞானத்திருவடி - மாத இதழ்**

**ஸ்ரீ அகத்தியர் சன்மார்க்க அறக்கட்டளை**

ஓங்காரக்குடில், 113–நகர்விரிவாக்கம், துறையூர் – 621 010. திருச்சி மாவட்டம்.

ஓங்காரக்குடில் அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

ரசீது எண் : .................... தேதி : .................... ரூபாய் : ....................

சந்தாதாரர் முகவரி மாற்றம் இருப்பின் கடிதம் மூலம் தெரிவிக்கவும்